விலை: 30.00
viber : 076 636 3378
பக்கங்கள் : பன்னிரண்டு + 12

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கலயாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 21 ஞாயிற்றுக்கிழமை (07.11.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 323

## சீமெந்தின் விலையை 177 ரூபாயால் அதிகரிக்கத் தீர்மானம்




(கொழும்பு)

50 கிலோ கிராமுடைய சீமெந்து பக்கெட் ஒன்றின் விலையை 177 ரூபாயினால் அதிகரிக்க உள்நாட்டில் சீமெந்தை விநியோகிக்கும் நிறுவனங்கள் தீர்மானித்துள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

## இராஜாங்க அமைச்சர் விதுர யாழ். பல்கலைக்கு நேற்று விஜயம்

### பல்கலை தொல்லியல் தொடர்பில் கேட்டறிந்தார்

(யாழ்ப்பாணம்)

தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக் கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க யாழ்ப் பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயமொன்றை மேற்கொண்டு, பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரை 11

## நுணாவிலில் விபத்துக்குள்ளான வயோதிபர் மரணம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-நுணாவில் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந் 11 துள்ளார்.

## உரிமைகளை வென்றெடுக்க ஒன்றிணைந்து பயணிப்போம்

### இரா. சம்பந்தன் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் த.மு.கூட்டணியின் தலைவர் மனோகணேசன் ஆகியோர் த.தே.கூ இன் தலைவர் இரா. சம்பந்தனை சந்தித்து கலந்துரையாடினர்.

த.தே.கூ. தலைவர் இரா. சம்பந்தனின் இல்லத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பு குறித்து 12


## நான் நினைத்திருந்தால்

# இராணுவ ஆட்சியை முன்னெடுத்திருப்பேன்

## ஜனாதிபதி கோட்டா தெரிவிப்பு

(கொழும்பு)

**நான் நினைத்திருந்தால் இராணுவ ஆட்சியை முன்னெடுத்திருப்பேன். ஆனால் நான் அவ்வாறு செய்யவில்லை. நாட்டில் புரட்சிகரமான மாற்றத்தை நிச்சயமாக ஏற்படுத்துவேன். எனது அரசை நம்புங்கள் என ஜனாதிபதி கோட்டா தெரிவித்துள்ளார்.**



நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கோட்டாபய என்பவர் இராணுவ 11

## கொரோனா 20 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் மேலும் 20 பேர் கொரோனா தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர் 11

## எரிபொருள் லொறி விபத்து 91 பேர் பலி

(ஆபிரிக்கா)

மேற்கு ஆபிரிக்க நாடான சியரா லியோனின் தலைநகரில் ஒரு எரிபொருள் கொள்கலன் லொறி விபத்தில் சிக்கி வெடித்துச் சிதறியதில் குறைந்தது 91 பேர் பலியாகினர். 100 -க்கும் மேற்பட்டோர் 11

## பயணிகளை ஏற்றிச்சென்ற சாரதி திடீரென மரணம்

### சங்குப்பிட்டியில் சம்பவம்

(சாவகச்சேரி)

பயணிகளை ஏற்றிச்சென்ற சாரதி திடீரென மரணமடைந்துள்ளார். பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தடியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஏ32 வீதி ஊடாக ஹயஸ் வாகனத்தில் பயணிகளை ஏற்றிச்சென்ற சாரதி ஒருவர் நேற்று சனிக்கி 11

## புங்குடுதீவில் கடற்படையின் தேவைக்காக காணி அபகரிப்பதற்கு நடவடிக்கை

### தடுத்து நிறுத்த ஒன்றுகூடுமாறு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவில் தமிழ்மக்கள் பலருக்கும் சொந்தமான காணிகள் கடற்படையினரின் முகாம்கள் அமைப்பதற்காக அபகரிக்கப்படவுள்ளன.

இதற்கான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாளை திங்கட்கிழமை ஜே-24 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட 11

## கொரோனா +617

(கொழும்பு)

நாட்டில் மேலும் 617 கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள் 11

## கிணற்றில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு



### நண்பர்களுடன் நீந்தச் சென்ற வேளை சுழிபுரத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

நண்பர்களுடன் கிணற்றில் நீந்தச் 11

## இலங்கையை சூழ காற்றுச் சுழற்சி

## இன்றும் நாளையும் யாழில் மழைக்கு சாத்தியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இன்றும் நாளையும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுவதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையை சூழ்ந்திருக்கும் காற்றுச் சுழற்சியின் தாக்கம் காரணமாக யாழ்ப் பாண மாவட்டத்தில் 11

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (8265)

☎ -070 640 5951
e-mail : engchelvam@gmail.com


# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் சுகம் பேணும் நிலையம் வட்டுக்கோட்டையில் திறப்பு



மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் "சுகம் பேணும் நிலையம்" கிளை வைத்தியசாலையானது, வட்டுக்கோட்டை ஆத்தியடி பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில், நேற்றையதினம் மாலை 3 மணியளவில் திறந்து வைக்கப்பட்டது.

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் வட்டுக்கோட்டை சமூகம் ஆகியன இணைந்து இந்த வைத்தியசாலையை ஆரம்பித்து வைத்தனர்.

மூளாய் - கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் தலைவர் மா.ஞானேஸ்வரன் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் திரு.சிறீ சற்குணராஜா பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சம்பிரதாயபூர்வமாக வைத்தியசாலையை திறந்து வைத்தார். இந்த திறப்பு விழா நிகழ்வில் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையின் செயலாளர் திரு.க.செல்வராசா, மூ.கூ.வை.பொருளாளர் அ.கிருஷ்ணமூர்த்தி, வைத்திய அத்தியட்சகர் வைத்திய கலாநிதி கே.சுரேந்திரகுமாரன், வைத்தியர் பி.சிறீகிருஷ்ணா, வைத்தியர் றஜனி, வைத்திய நிபுணர் வீரசுதன் மற்றும் வைத்தியர் பி.யசிதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த வைத்தியசாலையின் இலவச வைத்திய சேவைகளான நீரிழிவு பரிசோதனை, இரத்த பரிசோதனைகள் உள்ளிட்ட பல பரிசோதனைகள் இடம் பெறவுள்ளன. (ம-3,33,104)


## PROJECT MANAGER
## BUILDING CONSTRUCTION

**Civil Engineer having more than 3 years' experience in Building Construction required at a capacity of a Project Manager to take forward an ongoing project on contractual basis for 6 months.**

- ❖ Project site is at Iyakkachchi.
- ❖ Accommodation, if required could be provided.
- ❖ Ideal candidate could be offered an attractive package.
- ❖ Please forward your CV to md@isfindustries.com

(8536)

HERITAGE
Heritage Agri

**Heritage Agri Private Limited**
**No. ¾, Rockwood Place,**
**Colombo 07.**
**077 207 8455**



## பணிப்பெண் தேவை

எமது வயோதிபத் தாயாரை கூடவே இருந்து பராமரிப்பதற்கு பெண் பணியாளர் தேவை தங்கி நின்று வேலை செய்யக் கூடியவர்கள் மட்டும் நேரடியாக தொடர்பு கொள்ளவும் மாதாந்தம் விடுமுறை எடுக்கலாம் தரகர்கள் தேவையில்லை வேலை விபரம், சம்பளம் நேரடியாக தீர்மானிக்கலாம் (C_2969)

தொடர்பு
**076 484 7171** கரவெட்டி



## UNOPS

**வெற்றிட அறிவித்தல்கள்**

பதவி வகை : சாரதி
ஒப்பந்த வகை : தனிநபர் ஒப்பந்தகாரர் ஒப்பந்தம் (ICA), உள்ளூர், (LICA 2)
கடமை இடம் : மட்டக்களப்பு / முல்லைத்தீவு, இலங்கை
இறுதி திகதி : 2021 நவம்பர் 15

மேலதிக தகவல்களுக்கும், எவ்வாறு விண்ணப்பிப்பது போன்ற விபரங்களுக்கும் UNOPS Jobs இற்கு பிரவேசியுங்கள் (https://jobs.unops.org/Pages/ViewVacancy/VADetails.aspx?id=22790&media=print)

மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் **0112665146/ prabuddhik@unops.org** ஊடாக எம்மை தொடர்பு கொள்ளுங்கள்.

தகுதியான பெண்கள் விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகிறார்கள் விண்ணப்பங்கள் UNOPS Jobs இணையத்தளத்தின் ஊடாக மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். (C-1509)


# மரண அறிவித்தல்

## இராசம்மா அருணாசலம் (மதுரம்)



**பிறப்பு : 16.07.1943**
**இறப்பு : 01.11.2021**

குருக்கள் குடியிருப்பு, வரணியைப் பிறப்பிடமாகவும் சந்தை வீதி, கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராசம்மா அருணாசலம் கடந்த 01.11.2021 (திங்கட்கிழமை) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற செல்லையா - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருணாசலத்தின் ஆருயிர் மனைவியும் கந்தசாமி (சிறாப்பர் - புகையிரத திணைக்களம், மருதானை, அவுஸ்திரேலியா), சௌந்தரம், நாகராசா (ஓய்வுபெற்ற உள்ளக கணக்காய்வாளர் - மாவட்ட செயலகம், கிளிநொச்சி), சந்திரா (ஓய்வுபெற்ற ஆசிரியை - கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜெயராசா, தேவிகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் நந்தினி (கனடா), சிவாஜினி (ஆசிரியை - யா/கச்சாய் மகா வித்தியாலயம்), மலைச்செல்வன் (சுவிஸ்), கலைச்செல்வன் (சிவகஜன் பதிப்பகம் - கொடிகாமம்) மற்றும் காலஞ்சென்ற சிவச்செல்வன் ஆகியோரின் ஆருயிர்த் தாயாரும் இராகுலன் (கனடா), சக்திகுமார், நிசாந்தி (சுவிஸ்), ஒளிவதனா (ஆசிரியை - மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியாரும் அபிநயா - ஜதார்த்தன், தர்சிகா, சாருஜன், ஆர்த்திகன், சங்கவி, ராகவி, ஆதவன், அபிஷா, அபிஷேத், அபிஆரன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் வில்லியம்ஸின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று முன்தினம் (05.11.2021) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணிக்கு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். (C-2967)

சந்தை வீதி,
கொடிகாமம்.
077 768 2131
தகவல் :-
குடும்பத்தினர்


## கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்)

### விலைக் கேள்விக்கான கோரல்
### செல்லையா கட்டட புனரமைப்பு

1. கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க (தாய்ச்சங்க) பெறுகைக் குழுவின் தலைவர் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடை கோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக் கேள்வியினைக் கோருகின்றார்.
2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள் நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA)கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகுதிவாய்ந்த மற்றும் இதில் நாட்டமுள்ள விலைக் கேள்வியாளர்கள், பழைய மாணவர் சங்கம் (தாய்ச்சங்கம்), யா/கொக்குவில் இந்துக் கல்லூரி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து மேலதிக விபரங்களையும் கேள்விப் பத்திரங்களையும் **10.11.2021** முதல் **24.11.2021** வரையான அலுவலக நாட்களில் **மு.ப.9.00** மணியிலிருந்து **பி.ப.1.00** மணி வரையான காலப்பகுதியில் ரூபா. 1,000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
5. மூடிய உறையிடப்பட்ட விலைக் கேள்விப் பத்திரங்கள் **25.11.2021** ஆம் திகதியன்று **மு.ப.11.00** மணிக்கு முன்பதாக **தலைவர், பழைய மாணவர் தாய்ச்சங்க பெறுகைக்குழு, கொக்குவில் இந்துக் கல்லூரி. கொக்குவில்** எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்வி விண் ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விலைக்கேள்விகள் அவைகள் மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைக் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.

| கேள்விஅடையாள இல. | வேலை விபரம் | தேவையான தரம் | ஒப்பந்த காலம் | கேள்விப் பிணை விபரம் | |
|---|---|---|---|---|---|
| | | | | தொகை | தேவைப்படும் காலம் |
| KHC/OSA/CHELLIYA / 01/2021 | செல்லையா கட்டடம் புனரமைத்தல் | C8/C7 | 60 நாட்கள் | ரூபா. 40,000.00 | 22.02.2022 வரை |

(C-2968)

**தலைவர்,**
**பழைய மாணவர் தாய்ச்சங்க பெறுகைக்குழு**
**கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.**
**077 608 0926**

# தமிழ் மக்களை அச்சுறுத்தி- அடக்கி வைப்பதை நிறுத்தி

# ஜனநாயக ரீதியிலான ஆட்சியை அமுல்படுத்துங்கள்

## அரசிடம் எதிர்க்கட்சி கோரிக்கை



(கொழும்பு)

**போர் முடிவிற்குக்கொண்டுவரப்பட்டு பலவருடங்கள் கடந்துள்ள நிலையிலும், இன்னமும் வடக்கின் பல்வேறு பகுதிகளிலும் சோதனைச்சாவடிகள் நிறுவப்பட்டிருக் கின்றன. இதுவோர் ஜனநாயக நாடு என்பதையும் இங்கு ஜனநாயக நிர்வாகமே அமுலில் உள்ளது என்பதையும் வடக்கு மக்கள் உணரக்கூடியவகையில் அரசாங்கம் செயற்படவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன வலியுறுத்தியுள்ளார்.**

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலை மைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிடு கையிலேயே அவர் மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக் கையில்,

சில தினங்களுக்கு முன்னர் வடமாகாணத்தின் சகல பகுதி களுக்கும் சென்று, அங்குள்ள மக்களைச் சந்தித்துக் கலந் துரையாடியிருந்தோம். அதன் மூலம் தற்போது தெற்கில் வாழும் மக்கள் முகங்கொடு த்துள்ள அனைத்துப் பிரச்சி னைகளும் வடக்கிலும் இருப் பதைப் புரிந்துகொள்ள முடி ந்தது.

ஆனால் வடக்கில் வாழும் மக்களை அச்சுறுத்தி, அடக்கி வைத்திருப்பதன் காரணமாக அவர்கள் தெற்கிலுள்ள மக்க ளைப்போன்று வீதிகளில் இறங்கிப்போராட முடியாதவர் களாக இருக்கிறார்கள்.

அங்கும் விவசாயம், மீன்பிடி, சுற்றுலா உள்ளிட்ட அனைத்துத்துறைகளும் பாதிக் கப்பட்டிருப்பதுடன் மக்களின் வருமானம் வெகுவாக வீழ்ச்சி யடைந்துள்ளது.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் காணாமல்போன அல்லது வலிந்து காணாமலா க்கப்பட்டவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்து கொள்வதற்காகப் பெருமளவா னோர் காத்திருக்கின்றார் கள்.

மேலும் போர் முடிவடைந்து பலவருடங்கள் கடந்தும் அங்கு வீதிகளில் சோதனைச் சாவடிகள் இயங்குகின்றன.

இவை நாட்டின் தேசியப் பாது காப்பை உறுதிசெய்வதற்கு அவசியம் எனும்போதிலும், அதனை பொதுமக்களின் சாதாரண வாழ்க்கையில் எவ்வித பாதிப்புக்களையும் ஏற்படுத்தாத வகையில் புல னாய்வுப்பிரிவினர் ஊடாகவே முன்னெடுக்கவேண்டும் என அவர் தெரிவித்தார். (நி)

---

## த.தே.கூ.பிரதிநிதிகள் அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் பிரதிநிதிகள் குழு ஒன்று இன்னும் இரண்டு வாரங்களுக்குள் அமெரிக்கா வுக்கான விஜயத்தை மேற் கொள்ளவுள்ளது.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் அழைப் பின் பேரில் இந்த விஜயம் இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தென்னிலங்கை ஊடகம் ஒன் றுக்கு தெரிவித்தார். (நி)

---

## 10,11 மற்றும் உயர்தரத்திற்கான

## கற்றல் செயற்பாடுகள் நாளை ஆரம்பம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளின் சாதாரண தர மற்றும் உயர்தரங்களுக்கான கற்பித்தல் செயற்பாடு நாளை முதல் ஆரம்பிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள் ளது.

இதற்கான சகல ஏற்பாடு களும் பூர்த்தி செய்யப்பட்டுள் ளதாக கல்வி அமைச்சின் செய லாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்தார்.

இதேவேளை, சாதாரண தரம் மற்றும் உயர்தர மாண வர்களுக்கான மேலதிக வகு ப்புக்களை 50 சதவீத கொள் ளளவில் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் அசேல குண வர்தனவினால் வெளியிடப்ப ட்டுள்ள சுகாதார வழிகாட்டிக்கு அமைவாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிட த்தக்கது. (நி)

---

## சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் கொரோனா

### 51 பேருக்கு தொற்று உறுதி

(பண்டாரவளை)

பண்டாரவளை பிரதேச த்திலுள்ள சிறுவர் பராமரிப்பு இல்லமொன்றில் 51 பேருக்கு நேற்று புதிதாக கொரோனா வைரஸ் தொற்று இனம் காண ப்பட்டுள்ளது.

அவர்களில் 11 பேர் சிறுவர்கள் என்றும் ஏனை யோர் அங்கு பணிபுரிபவர்கள் என்றும் பண்டாரவளை சுகா தார மருத்துவ அதிகாரிகள் காரியாலயம் தெரிவித்து ள்ளது. (நி)

---

## எரிவாயு விலை அதிகரிக்காது

### லிட்ரோ நிறுவன தலைவர்

(கொழும்பு)

லிட்ரோ எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட மாட் டாது என அதன் தலைவர் திசார ஜெயசிங்க தெரிவித் தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்தி ப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே இதனை குறிப்பி ட்டார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

எரிவாயு விடயத்தில் மாபியாக்களின் சூழ்ச்சி யினால் விலையேற்றம் காணப்படுகின்றது. ஒரு சிலர் மாத்திரம் இந்த வர்த் தகத்தில் ஈடுபட விரும்பு வதினால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே நாட்டில் ஏற்பட் டுள்ள எரிவாயுப் பிரச்சனை க்குத் தீர்வு காணும் வகை யில் லிட்ரோ எரிவாயு நிறு வனம் தொடர்ந்தும் உற் பத்திகளை மேற்கொண்டு வருகிறது.

இன்னும் ஒரு சில தின ங்களுக்குள் சந் தையில் போதுமான லிட்ரோ எரி வாயுவினை வழங்குவ தற்கு நடவடிக்கை எடுத் துள்ளோம்.

உலக சந்தையில் எரி பொருள் விலை அதிகரித்த போதிலும் நாம் விலை அதிகரிப்பினை செய்யவும் இல்லை செய்யப்போதும் இல்லை. எதிர்வரும் டிசெ ம்பர் மாதமளவில் உலக நிலைமை சரியாகு மாயின் மேலும் குறைந்த விலை க்கு எரிவாயுவினை மக்க ளுக்கு வழங்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி)

---

## நீதி அமைச்சர் பதவி விலக தீர்மானம்?

(கொழும்பு)

நீதியமைச்சர் அலிசப்ரி தனது அமைச்சர் பதவியிலிரு ந்தும், பொதுஜனபெரமுனவின் உறுப் புரிமையிலிருந் தும் விலகவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

"ஒரே நாடு ஒரே சட்டம்" என்ற ஜனாதிபதி செயல ணியின் தலைவர் பதவியை கலகொட அத்தே ஞானசார தேரருக்கு வழங்கியமைக்கு நீதியமைச்சர் அலிசப்ரி தொட ர்ந்தும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் மாலை ஜனாதி பதியை நேரில் சந்தித்து அலிசப்ரி தனது இராஜி னாமா கடிதத்தை கையளித்திருந்த தாகவும் அதனை ஏற்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச மறுத்துவிட்டதாகவும் தகவல் கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

---



யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், யாழ்.மாவட்ட 51 ஆவது பிரிவின் இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்ரமசிங்க ஆகியோருக்கு இடையில் சந்திப்பொன்று நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்டச் செய லகத்தில் இடம்பெற்றது. (படம்-ரவிசாந்)

---

## அரிசி,சீனி வாங்கும் போது வேறு பொருட் கொள்வனவு கட்டாயமில்லை- பந்துல

(கொழும்பு)


சதொச விற்பனை நிலை யங்களில் அரிசி மற்றும் சீனி ஆகியவற்றை கொள்வனவு செய்யும் போது, அதற்கு மேல திகமாக வேறு பொருட்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய கட்டாயம் இல்லை என வர்த்தக அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த 4 ஆம் திகதி முதல் சதொச விற்பனையகங்களில் அரிசி மற்றும் சீனி ஆகியன வற்றை மாத்திரம் கொள்வனவு செய்வதற்கு இடமளிக்கப்படமாட் டாது. இதனை கொள்வனவு செய் வதாயின் மேலதிகமாக 5 பொரு ட்களை கொள்வனவு செய்ய வேண்டும் என்று வர்த்தக அமை ச்சர் பந்துல அறிவிப்பொன்றை வெளியிட்டிருந்தார்.

இதற்கு கடும் எதிர்ப்பு வெளி யாகியிருந்த நிலையில் இந்த நடைமுறை நீக்கப்படுவதாக நேற்று அமைச்சர் அறிவித்தார். (நி)

# ஸ்கொட்லாந்தை சுருட்டியது இந்தியா

# புள்ளிப்பட்டியலில் முன்னேற்றம்



ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்றுவரும் 7 ஆவது இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட்டின் அரை இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கான தகுதியைப் பெறுவதற்கு கடும் முயற்சியில் இறங்கியுள்ள இந்தியா, நேற்று முன் தினம் நடைபெற்ற ஸ்கொட்லாந்துக்கு எதிரான குழு 2 க்கான உலகக் கிண்ண சுப்பர் 12 சுற்றில் 8 விக்கெட்டுகளால் அமோக வெற்றியீட்டியது.

வெற்றியுடன் குழு 2 இற்கான அணிகள் நிலையில் இந்தியா 4 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்துக்கு முன்னேறியுள்ளது.

எனினும் நியூசிலாந்துக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள போட்டியின் முடிவே இந்தியாவால் அரை இறுதிக்கு முன்னேற முடியுமா இல்லையா? என்பதைத் தீர்மானிக்கும்.

போட்டியில் ஸ்கொட்லாந்தினால் நிர்ணயிக்கப்பட்ட 86 ஓட்டங்கள் என்ற மிக இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்தியா 6.3 ஓவர்களில் 2 விக்கெட்களை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது.

கே.எல். ராகுல், ரோஹித் ஷர்மா ஆகிய இருவரும் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி 30 பந்துகளில் 70 ஓட்டங்களைப் பகிர்ந்தனர்.

ரோஹித் ஷர்மா 16 பந்துகளை எதிர்கொண்டு 5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸருடன் 30 ஓட்டங்களையும் கே.எல்.ராகுல் 19 பந்துகளில் 8 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக 50 ஓட்டங்களையும் பெற்றனர். சூரியகுமார் யாதவ் சிக்ஸ் மூலம் வெற்றி ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து 6 ஓட்டங்களுடனும் அணித் தலைவர் விராட் கோலி 2 ஓட்டங்களுடனும் ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

இந்திய பந்துவீச்சில் ரவிந்திர ஜடேஜா 4 ஓவர்களில் 15 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்களையும் மொஹம்மத் ஷமி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 3 ஓவர்களில் 15 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்களையும் ஜஸ்பிரிட் பும்ரா ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 3.4 ஓவர்களில் 10 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். (4-6)



# இளம் வீரர்களுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டும்

## ஷேவாக்

நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் சீனியர் வீரர்களுக்கு ஓய்வு அளிக்கவேண்டும் என்று முன்னாள் தொடக்க அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் வலியுறுத்தி உள்ளார்.

நியூசிலாந்து கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து மூன்று 20 ஓவர் மற்றும் 2 டெஸ்டில் விளையாடவுள்ளது. 20 ஓவர் போட்டிகள் எதிர்வரும் 17, 19 மற்றும் 21ஆம் திகதியில் நடைபெறவுள்ளது.

முதல் டெஸ்ட் எதிர்வரும் 25ஆம் திகதியும், 2ஆவது டெஸ்ட் டிசம்பர் 3ஆம் திகதியும் தொடங்குகிறது.

இந்த நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் சீனியர் வீரர்களுக்கு ஓய்வு அளிக்க வேண்டும் என்று முன்னாள் தொடக்க அதிரடி ஆட்டக்காரர் ஷேவாக் வலியுறுத்தி உள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது:-

அடுத்த ஆண்டு அவுஸ்ரேலியாவில் நடைபெறும் 20 ஓவர் உலக கிண்ண போட்டிக்கு அணியை இப்போதே தயார் செய்ய வேண்டும். தற்போது உள்ள வீரகளில் ராகுல், இஷான் கிஷன், சூர்யகுமார் யாதவ் ஆகியோர் அடுத்த உலக கிண்ணத்தில் ஆட வேண்டும். ருதுராஜ் கெய்க்வாட், ஸ்ரேயாஸ் அய்யர் ஆகியோருக்கு வாய்ப்பு வழங்க வேண்டும்.

எனவே நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் சீனியர் வீரர்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டும். உள்ளூரில் விளையாடுவதால் வீரர்களுக்கு சில அனுபவங்கள் கிடைக்கும். அதற்கு ஏற்ற வகையில் அணியை தயார் செய்ய வேண்டும் என தெரிவித்தார். (4-6)

# நியூசிலாந்திடம் வீழ்ந்தது நமீபியா

இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் 36 ஆவது லீக் போட்டியில், நியூசிலாந்து கிரிக்கெட் அணி 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

சார்ஜாவில் நேற்று முன் தினம் குழு 2 இல் நடைபெற்ற இப்போட்டியில் நியூசிலாந்து கிரிக்கெட் அணியும் நமீபியா அணியும் பலப்பரீட்சை நடத்தின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நமீபியா கிரிக்கெட் அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 163 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.


இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, க்ளென் பிலிப்ஸ் ஆட்டமிழக்காது 39 ஓட்டங்களையும் ஜேம்ஸ் நீஷம் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

நமீபியா அணியின் பந்துவீச்சில், ஈ.ராஸ்மஸ், வெய்ஸ் மற்றும் ஷால்ட்ஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 164 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய நமீபியா அணியால், நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 111 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால், நியூசிலாந்து கிரிக்கெட் அணி 52 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மைக்கேல் வான் லிங்கன் 25 ஓட்டங்களையும் ஷேன் க்ரீன் 23 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில், டிம் சவுதீ, ட்ரெண்ட் போல்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் மிட்செல் சான்ட்னர், ஜேம்ஸ் நீஷம் மற்றும் இஷ் சோதி ஆகியோர் தலா 1 விக்கெட்டினை வீழ்த்தினர்.



இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 1 விக்கெட்டினையும் ஆட்டமிழக்காது 35 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்ட ஜேம்ஸ் நீஷம் தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# இராசிபலன்

07.11.2021
ஐப்பசி 21, ஞாயிற்றுக்கிழமை
திருதியை முன்னிரவு 8.57 மணிவரை
கேட்டை பின்னிரவு 2.00 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை

வளவன்


மேஷம்

மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், உடல் நலனில் அதிக கவனம் தேவை.


ரிஷபம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.


மிதுனம்

மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.


கடகம்

பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவையற்ற சந்தோசங்களைத் தவிர்ப்பது நல்லது, உடல் நலனில் கவனம் செலுத்துவது நல்லது.


சிம்மம்

குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, நண்பர்கள் நம்பிக் கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், போசன சுகமுண்டு.


கன்னி

குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் நிலை ஏற்படலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.


விருச்சிகம்

மனதில் இனம்புரியாத சிந்தனைகள் தோன்றி மறையும், பெரிய மனிதர்களின் சந்திப்பால் பெருமை காணும் நாள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


தனுசு

வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் அதுகரிக்கும் நாள், சுப விரயங்கள் மேலோங்கும் வாய்ப்புண்டு, சயன சுகக் குறைவுண்டு.


மகரம்

குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.


கும்பம்

எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


மீனம்

தொழில் ரீதியான பயணங்களில் கூடுதல் கவனம் தேவை, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**உன் மனமே உனக்கு எதிரியாகி விடாமல் பார்த்துக்கொள்**

# கொவிட் தொற்றுக்குள்ளான தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகளை தாக்கும் புதிய நோய்

## அவதானத்துடன் செயற்படுமாறு மருத்துவர் வாசன் எச்சரிக்கை

**(கொழும்பு)** பிறந்து 28 நாட்களை விடக் குறைவான சிசுக்களை தாக்கும் மிஸ்-என் பல்உறுப்பு அழற்சி நோய் தொடர்பில் கர்ப்பிணிகள் மிகுந்த அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்று கொழும்பு - சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் மருத்துவர் வாசன் ரட்னசிங்கம் தெரிவித்தார்.

இந்நோய் கொவிட் தொற்றுக்கு உள்ளான கர்ப்பிணி தாய்மாருக்கு பிறக்கும் குழந்தைகளுக்கே ஏற்படுகிறது.

கர்ப்ப காலத்தில் தாய்மார் கொவிட் தொற்றுக்கு உள்ளாகும் போது அவர்களின் உடலில் எதிர்ப்பொருள் (அன்டிபொடீஸ்) தோற்றுவிக்கப்பட்டு அவை தொப்புள்கொடியூடாக வயிற்றிலுள்ள சிசுவுக்குச் செல்வதால் இந்நோய் ஏற்படுகிறது என்றும் மருத்துவர் தெரிவித்தார்.

இந்த நோயின் உச்ச பட்ச பாதிப்பு சகல உடற் தொகுதிகளையும் செயலிழக்கச் செய்யும். இதனால் இந்நோயால் பாதிக்கப்படும் குழந்தைகள் உயிரிழக்கக் கூடிய வாய்ப்புக்களும் அதிகமாகும் என அவர் தெரிவித்தார். (ஙி)

## பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாகும் தேரர்கள்

(கொழும்பு) களனி பல்கலைக் கழகத்தின் புதிய வேந்தராக களனிரஜமகா விகாரையின் பீடாதிபதி, கொள்ளுப்பிட்டி மஹிந்த சங்கரக்கித தேரர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய வேந்தராக நாரஹேன்பிட்டி அபயராமவிகாராதிபதி முருத்தெடுவே ஆனந்த தேரர் அண்மையில் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஙி)


# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



கடந்த 07.10.2021 வியாழக்கிழமையன்று
இறைபதமடைந்த எமது குடும்ப ஒளிவிளக்கு

அமரர்.**செல்லையா இரத்தினசிங்கம்**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 07.11.2021 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 04.00 மணியளவில் மருமகன் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் அஸ்தி கரைக்கப்படும். தொடர்ந்து பகல் 12.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

(C-2956)

குடும்பத்தினர்.
077 791 0306

# பொலித்தீன் அற்ற நகராக சாவகச்சேரியை மாற்ற முடியும்

## தவிசாளர் சிவமங்கை நம்பிக்கை

(சாவகச்சேரி)

பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் அற்ற நகராக சாவகச்சேரி நகரை மாற்ற முடியும் என சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தெரிவித்தார்.

அண்மையில் இடம்பெற்ற வளங்கள் சுத்திகரிப்பு நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,

கழிவு முகாமைத்துவம் தொடர்பான பின்லா திட்டம் ஊடாக நகரில் பாரிய முன்னேற்றங்களைக் கண்டுள்ளோம். இலங்கையில் குறித்த திட்டம் மூன்று உள்ளூராட்சி சபைகளில் கடந்த 2019 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதில் ஒரு சபையாக எமது நகரசபை காணப்படுவது எமக்கு கிடைத்திருக்கும் வரப்பிரசாதம்.

வேள்ட்விஷன் மற்றும் செவணத நிறுவனங்களின் பங்களிப்பில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் கடந்த 2020 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட பிளாஸ்டிக் கொள்வனவு நிறுவனம் மற்றும் தற்போது நிறுவப்படவுள்ள வளங்கள் சுத்திகரிப்பு நிலையம் ஆகியன ஊடாக பொலித்தீன்,பிளாஸ்டிக் கழிவுகள் அற்ற தூய்மையான நகராக சாவகச்சேரி நகரை மாற்ற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது என அவர் தெரிவித்தார். (4-30)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்குட்பட்ட விவசாயிகள் மற்றும் கால் நடை வளர்ப்போருக்கான தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் கற்கைநெறி வடமாகாண விவசாயமும் கமநல சேவைகளும் கால் நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து டிசெம்பர் முதலாம் வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதால் குறித்த பயிற்சி நெறியில் பங்குபெற ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் கால் நடை வளர்ப்போரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை தங்கள் பிரிவுக்குரிய விவசாய போதனாசிரியர்கள் மற்றும் கால்நடை அபிவிருத்திப் போதனாசிரியர்களைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்வதுடன் இதனை பூரணப்படுத்தி பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் அலுவலகம் அல்லது கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பிரதிப்பணிப்பாளர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என வடமா காண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரம் அறிவித்துள்ளார். (4-5)

# துப்புரவுப் பணி என்ற பெயரில் வீதியோர மரங்கள் அழிப்பு

## சாவ.நகரசபை உறுப்பினர் குற்றச்சாட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரப் பகுதியில் துப்புரவுப் பணி என்ற பெயரில் சில திணைக்களங்களால் வீதியோர நிழல் மரங்கள் எரிக்கப்படுவதாக சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் தெரிவித்தார்.

அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

பசுமை நிழல்கள் அமைப்பினரால் தென்மராட்சியில் ஏ-9 வீதியோரமாக நிழல் மரங்கள் வைத்துப் பராமரிக்கப்பட்டு வரும் நிலையில் அவை அண்மைக்காலமாக எரியூட்டப்பட்டு அழிக்கப்படுவதனை அவதானிக்க முடிகிறது.

இளம் சமுதாயம் ஆர்வமாக இவ்வாறான முன்மாதிரியான செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும் வேளையில் அவர்களை ஊக்குவிக்க வேண்டியது அவசியம். சில திணைக்களங்களே துப்புரவு என்ற பெயரில் மரங்களை அழிக்கின்றன.

அவ்வாறாயின் மரங்களை வைக்க முன்னரே குறித்த திணைக்களங்கள் தமது இடங்களில் மரங்களை வைக்க வேண்டாம் என அறிவுறுத்தி இருக்க வேண்டும்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக பசுமை நிழல்கள் அமைப்பினர் பராமரித்து நன்றாக வளர்ந்த மரங்கள் எரியூட்டப்படுவது அவர்களின் முயற்சிக்கு முன்மாதிரியான செயற்பாட்டிற்கு தடை போடும் செயலாகும் என அவர் தெரிவித்தார். (4-30)



யாழ். போதனா வைத்தியசாலையில் நிலவும் குறைபாடுகள் மற்றும் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியக் கலாநிதி அரவிந்தன் ஆகியோர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 120 | 140 | 200 |
| தக்காளி | 400 | 300 | 450 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 60 | 40 |
| கோவா | 140 | 160 | 180 |
| கரட் | 240 | 270 | 280 |
| பூசணி | 50 | 60 | 80 |
| புடோல் | 200 | 160 | 160 |
| வாழைக்காய் | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 280 |
| பெரிய வெங்காயம் | 190 | 200 | 200 |
| பாகற்காய் | 600 | 270 | 500 |
| வெண்டிக்காய் | 150 | 120 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 140 |
| பயற்றங்காய் | 300 | 360 | 320 |
| லீக்ஸ் | 230 | 240 | 280 |
| பீற்றூட் | 50 | 60 | 80 |
| கறிமிளகாய் | 380 | 320 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 200 |
| போஞ்சி | 300 | 320 | 400 |
| கத்தரிதம்புள்ள | 180 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 90 | 60 | 80 |
| தேசிக்காய் | 450 | 450 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 50-80 |
| இராசவள்ளி | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 300 | -- | 120 |
| முள்ளங்கி | 150 | 100 | -- |
| பொன்னாங்காணி | 45 | 50 | 40 |
| வல்லாரை | 80 | 20 | 30 |
| ஈரப்பலா | -- | -- | 120 |

# யாழின் தொன்மங்கள் குறித்து அமைச்சர் விதுரவிடம் எடுத்துரைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் தொன்மை வாய்ந்த நல்லூர் மந்திரிமனை, சங்கிலியன் சிலை, யமுனா ஏரி உள்ளிட்டவற்றை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவிடம், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் எடுத்துரைத்தார்.

நேற்று இடம்பெற்ற கள விஜயத்தின் போது, இவ் விடயங்கள் அவரால் அமைச்சரிடம் எடுத்துரைக்கப்பட்டன.

இலங்கையில் நீண்ட காலமாக மக்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகளைக் கொண்ட யாழ்ப்பாண மாவட்டமானது, ஏராளமான தொன்மங்களை கொண்டுள்ளது.

அவற்றை பாதுகாப்பது எமது மூதாதையருக்கும் அடுத்துவரும் சந்ததிக்கும் நாம் செய்யும் கடமை என இதன் போது அங்கஜன் இராம நாதன் தெரிவித்தார். (5-4-18-33)

# முச்சக்கரவண்டி மோதியதில் ஆசிரியர் படுகாயம்

(சாவகச்சேரி)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்கு அருகாமையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் பேருந்தில் ஏறுவதற்காக நடந்து சென்ற ஆசிரியரை வேகக் கட்டுப்பாட்டினை இழந்து வந்த முச்சக்கர வண்டி மோதியதில் ஆசிரியர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

விபத்தினை ஏற்படுத்திய முச்சக்கர வண்டி ஆசிரியரை மோதி விட்டு தப்பித்துச் சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த ஆசிரியரே இவ்வாறு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். (4-30)

# சிவவேள்வி பெருவிழா

(யாழ்ப்பாணம்)

கொரோனா நோய்த் தாக்கம் குறைவடையவும் உலக அமைதியை வேண்டியும் நல்லூர் வடக்கு வீதி கனக சபை இல்லத்தில் அமைந்துள்ள ஆறுமுக நாவலர் திருமுறை மண்டபத்தில் சிவ வேள்வி பெருவிழா (பன்னிரு திருமுறை, கந்தபுராணம், திருப்புகழ் முற்றோதல்) நிகழ்வு இன்று 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.55 மணிக்கு ஆரம்ப மாகி தொடர்ந்து இரவு-பகலாக எதிர் வரும் 19 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தற்போதைய கொவிட் சூழ் நிலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி இடம் பெறவுள்ளதால் 077 226 2572 அல்லது 076 989 7485 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு முன்கூட்டியே நேரத்தை ஒதுக்கிக் கொள்ளுமாறு சைவ சமய பாதுகாப்பு பேரவை செயலாளர் அறிவித்துள்ளார். (4)

# அரசியல் நோக்கங்களுக்காக பல்கலைக்கழகங்களை அரசு பயன்படுத்துகிறது

## பல்கலை. மாணவர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் பல்கலைக்கழகத்தை அரசியல் நோக்கங்களுக்காக பயன்படுத்துவதாக களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குற்றம் சாட்டியுள்ளது.

பல்கலைக்கழக துணைவேந்தர் உள்ளிட்ட நியமனங்கள் அதற்கு சிறந்த உதாரணம் என மாணவர் ஒன்றியம் சுட்டிக்காட்டியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக முருத்தெட்டுவே ஆனந்த தேரரின் நியமனத்தை பொது மக்கள் நிராகரித்துள்ளதாக ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொண்டுவருவதில் பிக்குகள் முக்கிய பங்காற்றியமை காரணமாகவே இந்த நியமனங்கள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான அரசியல் நியமனங்களை தாம் வன்மையாக கண்டிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். (நி)

# தலதா மாளிகையை படமெடுத்த வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

ஸ்ரீதலதா மாளிகை வளாகத்தின், அதி உயர் பாதுகாப்பு வலயமாக கருதப்படும் பகுதிகளை ட்ரோன் கமரா கொண்டு வீடியோ படம் எடுத்த பங்களாதேஷ் பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். தலதா மாளிகை வளாகத்தில் அனுமதியின்றி ட்ரோன் கமரா பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ள நிலையில் அவரை கைது செய்ததாகவும், தனது யூடியூப் அலைவரிசைக்காக அந்தக் காணொளிகளை எடுத்ததாகவும் பங்களாதேஷ் பிரஜை பொலிஸ் விசாரணைகளில் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் கைது செய்யப்பட்ட நபரின் ட்ரோன் கமரா, தொலைபேசி, கடவுச்சீட்டு உள்ளிட்டவற்றை பொறுப்பேற்றுள்ள பொலிஸ் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி)


## மணமகள் தேவை

லண்டனில் வாழும் 35 வயது புனர்பூசம் 2ம் பாத நட்சத்திர 7 இல் செவ்வாயுள்ள மணமகனுக்கும் 33 வயது பரணி நட்சத்திர செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கும் நன்கு படித்த அழகிய மணமகள்மாரை யாழ்ப்பாணத்தில் தேடுகின்றோம்.

(8533)

தொடர்புகளுக்கு:
0014166661855, 0776505097, 0212221515
www.sorkham.com

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த நற்குணமுள்ள உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் விரும்பப்படவில்லை. மணமகளின் ஜாதகத்தை கீழ்க்காணும் E.mail இற்கு அனுப்பி வைக்கவும். (8532)

vimasvinothan@gmail.com

## மணமகள் தேவை

கப்பலில் பணிபுரிந்து விடுமுறையில் நிற்கும் 35 வயது உத்தர நட்சத்திரம் உடைய இந்து கௌரவ மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.

தொடர்பு:
077 107 5043
(8523)

## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன்/ மணமகள் தேவையெனின் எம்முடன் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் தாராளமாக உள்ளன.

**உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் மணமகள் தேவை**

01. வயது 30, மூலம் நட்சத்திரம், பாவம் 11 3/4, Net work Engineer, சூரி+ செவ் 06 இல்
02. வயது 30, சித்திரை துலாம் இராசி, பாவம் 45, செவ் 07 இல் கார் நிறுவனம்
03. வயது 28; விசாகம் நட்சத்திரம், பாவம் 45, செவ்வாய் 07 இல் கனடா மெசின் இயக்குநர்.
04. வயது 37, ரோகிணி நட்சத்திரம், பாவம் 62, செவ் 07 இல், QA Analyst, கனடா

**வெளிநாட்டில் மணமகன் தேவை**

01. வயது 29, சதயம், பாவம் 62, சூரி + செவ் 07 இல் பட்டதாரி
02. வயது 33, மகம், பாவம் 34 3/4, செவ்வாய் 07 இல் A/L படித்தவர்

(8521)

**தொடர்புகளுக்கு:- 1437 244 6737 கனடா**
**076 349 0083 இலங்கை**

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து நட்சத்திரம்: கார்த்திகை
உயரம்:5'9"
கி.பா: செவ் 6 இல் சூரி 5இல்
தகைமை/தொழில்: பைக்கிங் கம்பனி A/L
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/12103

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: செவ் 10 இல் சூரி1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: பொறியிலாளர் (கனடா)
எதிர்பார்ப்பு:கனடா வதிவிடம் உடைய மணமகன் விரும்பத்தக்கது
தொ.இ: B/12114

பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்:சித்திரை
உயரம்:6"
தகைமை/தொழில்: A/L Online Job (கடை)
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: B/12116

பிறப்பு:1983 இந்து நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 49செவ் 8சூரி9இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:O/L பெயின்ற்கொன்றாக்
எதிர்பார்ப்பு: சாதாரண படித்தபெண்
தொ.இ: B/12117

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1995 இந்து நட்சத்திரம்: பூரம்
கி.பா: 35 1/4 செவ் 4சூரி1இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:. டிப்ளோமா வழிச் சிகிச்சையாளர்
எதிர்பார்ப்பு:என்ஜினியர் நில அவையாளர் வங்கியாளர்
தொ.இ:G/12108

பிறப்பு:1996 இந்து நட்சத்திரம்:பரணி
கி.பா:17செவ் 1சூரி2இல்
உயரம்:170 cm
தகைமை/தொழில்:O/L
தொ.இ:G/12110

பிறப்பு:1988 இந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா:செவ்9 சூரி11இல்
உயரம்:5'
தகைமை/தொழில்:O/L தையல் டிப்ளோமா
எதிர்பார்ப்பு:குழந்தையில்லாத விவாகரத்தும் ஏற்றுக்கொள்ளப்படும்
தொ.இ:G/12112

பிறப்பு: 1986இந்து நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா:67 1/4செவ் 9சூரி10இல்
உயரம்:5'2'
தகைமை/தொழில்: MBBS (Doctor)
எதிர்பார்ப்பு:உயர்தொழில் புரிவோர்
தொ.இ:G/12113

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.

## மணிவிழா நாயகியை மனதார வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலையில் ஆசிரியராக அரும் பணியாற்றி ஓய்வுபெறும்

திருமதி. **ஞானகலை நவரத்தினராஜா**

(ஆசிரியர். யா/ கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)






அவர்களுக்கு
இனிய மணிவிழா
வாழ்த்துக்களைத்
தெரிவிப்பதுடன் அவரின்
ஓய்வுக்காலம் சிறப்பாக
அமைய
வாழ்த்துகின்றோம்

சுந்தர வதனமதில்
அன்பான புன்சிரிப்புடன்
பணிதனில் பற்றுடனே
விநயமாய் கல்வியும்
நல் ஒழுக்கமும் தந்து
இணையிலா நற்சேவை
எம் பாடசாலையில்
இரு தசாப்தத்திற்கு
மேலாக
நிறைபணி புரிந்த
நல்லாசான்
பணி நிறைவு கண்டு
சிறப்புக்கள் பல பெற்று
பல்லாண்டு வாழ
அகவை நன்னாளில்
அகமகிழ்ந்து
வாழ்த்துகிறோம்

(8535)

பாடசாலைச் சமூகம்,
யா/ கொக்குவில் இந்து
ஆரம்பப் பாடசாலை

# பொருளாதார பாதிப்புகளால் வெளிநாட்டு இருப்புகள் வீழ்ச்சி

(கொழும்பு)

**இலங்கையில் கொரோனாப் பாதிப்பினால் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் வெளிநாட்டு இருப்புக்கள் வீழ்ச்சியடைந்து வருகின்றன.**

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் மத்திய வங்கி பணத்தை அச்சிடுவதன் மூலம் எந்த நேரத்திலும் நாடு முழுமையாக நிலைகுலைந்து போகலாம் என ஆய்வாளர்களால் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மத்திய வங்கி ஒக்டோபர் மாதத்தில் மாத்திரம் 130 பில்லியன் ரூபாயை அச்சிட்டுள்ளது. அத்தோடு 2019 டிசெம்பர் முதல் 2021 ஓகஸ்ட் வரை, இலங்கையின் பண விநியோகம் 2.8 ரில்லியன் ரூபாயால் அதிகரித்துள்ளது.

1.2 மில்லியன் அரச துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கும் ஓய்வூதியம் வழங்குவதற்கும் அதிகப் பணம் செலவிடப்பட்ட நிலையில் இந்த நடவடிக்கைக்கு மட்டும் ஒவ்வொரு ஆண்டும் அரசாங்கத்திற்கு ஒரு டிரில்லியன் ரூபாய் செலவாகிறது.

இருப்பினும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கு பணத்தை அச்சிடுவதற்கான முடிவை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அண்மையில் ஆதரித்த அதே வேளை உயர் பண வீக்கம் கவலையளிக்கிறது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை இலங்கையின் பணவீக்க விகிதம் இந்த ஆண்டு சுமார் 4 வீதத்தில் இருந்து சுமார் 7 வீதமாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# பாராளுமன்ற செங்கோலில் சேதம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் செங்கோலில், சிறு சேதங்கள் ஏற்பட்டுள்ளது என பாராளுமன்ற படைகல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கடந்த காலங்களில் ஏற்பட்ட அமைதியின்மைகளின் போது, இந்த சேதம் ஏற்பட்டிருக்கலாம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த சேதங்களை சரிசெய்வதற்கான இயலுமை, உள்நாட்டில் கிடையாது.

செங்கோலில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின், அதனை பிரித்தானியாவிலுள்ள அதன் தாய் நிறுவனத்திற்கு அனுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

### 21 ஆம் நூற்றாண்டின்

# நீண்ட சந்திர கிரகணம் இன்னும் இரு வாரங்களில்

(வோஷிங்டன்)

எதிர்வரும் 19 ஆம் திகதி நீண்ட சந்திர கிரகணம் நிகழும் என அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையம் அறிவித்துள்ளது. இது மூன்று மணித்தியாலம், 28 நிமிடங்கள், 23 விநாடிகள் நீடிக்கும் என்றும், நாசா தெரிவித்துள்ளது. இது 21 ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட சந்திர கிரகணம் ஆகும். இதன்போது, நிலவின் மேற் பரப்பு 97 சதவீதம் சிவப்பு நிறமாகக் காட்சியளிக்கும். குறிப்பாக வட அமெ ரிக்க பிராந்தியத்துக்கு இது தென்படும் என்றும், 2100 ஆம் ஆண்டு வரை மீண்டும் இவ்வாறானதொரு நீண்ட சந்திர கிரகணம் நிகழ வாய்ப்பில்லை எனவும் நாசா கணித்துள்ளது. (நி)

# அரசாங்கத்தின் மீது மக்களுக்கு துளி அளவும் நம்பிக்கை இல்லை

## ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இளைஞர்கள் உட்பட முழுச் சமூகமும் அரசாங்கத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை முற்றாக வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது. இன்றைய நாட்களில் வீதிகளில் காணப்படும் நீண்ட வரிசைகள் இதற்கு சிறந்த உதாரணம் என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார். அத்தியாவசியப் பொருட்களுக்கான வரிசையை விட நாட்டை விட்டு வெளியேறத் தயாராக இருக்கும் இளைஞர்களின் வரிசை நீண்டதாகக் காணப்படுகிறது.

உணவுப்பொருட்களின் விலை யேற்றத்தினால் மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (நி)



தமிழ்த்தேசிய கூட்டமைப்புத் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஆகியோர் இடையே நேரடி கலந்துரையாடல் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

# இன்று ஒரு தகவல்

## இடையிலே இருப்பவர்கள்

ஒருவரைப்பற்றி! இன்னொருவரிடம் தவறாகச் சொல்லாதீர்கள். அது நிச்சயம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தெரியவரும். ஒருவரைப்பற்றி நீங்கள் தவறாகக் கூறலாம். ஆனால், சம்பந்தப்பட்ட அதே நபர் அந்த இடத்தில் இருக்கும் போது அதைக் கூறுமளவிற்கு உங்களுக்குத் தைரியம் இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இடையிலே இருப்பவர்களிடம் கூறுவது கோழைத்தனம்.

இடையிலே இருப்பவர்களை நாம் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நமக்கும் மற்றவர்களுக்கும் இடையே தொடர்புக்கருவியாக இருப்பவர்களை நாம் அப்படிப் பயன்படுத்திக் கொண்டோமானால் நாம் நிறைந்த பயன்களைப் பெற்றவர்களாவோம்.

நாம் சாதாரணமாக ஒன்றைச் சொன்னால் கூட அதைப் பிரமாதப்படுத்தி, ஒன்றுக்குப் பத்தாய்ச் சொல்லி உறவைக் கெடுப்பார்கள்.

நீங்கள் யாரிடம் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்ள விரும்புகிறீர்களோ, யாரோடு உறவைப் பலப்படுத்திக்கொள்ள விரும்புகிறீர்களோ அவர்களுக்கும் உங்களுக்கும் வேண்டியவரை இடையிலே இருப்பவரை பிடியுங்கள். அவரையும் முன்னவரையும் பற்றிப் பிரமாதமாகச் சொல்லுங்கள். இடையிலே இருப்பவர் இந்தச் செய்தியை பிரமாதப்படுத்தி அவரிடம் சொல்லுவார். பாராட்டுகளை ஒருவர் நேரடியாகச் சொல்வதைவிட இடையிலே இருப்பவர் மூலம் தெரியப்படுத்துவதற்குத்தான் வலிமை அதிகம்.

உங்களுக்கு மிக வேண்டியவர் ஒருவர் ஓர் உதவியைக் கேட்டிருப்பார். நீங்களோ உங்கள் இயலாமையைப் பக்குவமாகத் தெரிவித்திருப்பீர்கள். ஆனால், இடையிலிருப்பவரோ, அவர் தரமுடியாது என்று சொல்லிவிட்டார் என்று சொல்லி உங்களிடையே இருக்கும் உறவைக் கெடுத்து விடுவார்.

இடையிலே இருப்பவர் படிக்காதவராகவும், வார்த்தைகளைத் திரித்துக் கூறுபவராகவும் இருப்பவர் என உங்கள் மனதிற்குட்பட்டால், தெரிவிக்க வேண்டிய வார்த்தைகள் என்ன என்பதைச் சிறு பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதைப்போல் திரும்பத் திரும்பத் சொல்லிக் கொடுங்கள். அதைக் கூடச் சொல்வதற்கு அவர் அருகதை அற்றவர் என்றால் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

ஒருவரது அன்பையும் உறவையும் நீங்கள் முழுமையாகப் பெற வேண்டுமானால் அவர்கள் குறைகளை நேரடியாகச் சுட்டிக்காட்ட வேண்டும். ஆனால் மற்றவர்களிடம் அவரைப்பற்றிப் புகழ்ந்து சொல்ல வேண்டும். ஆனால், இப்போது இதே செயல்கள் தலைகீழாக நடக்கின்றன. அதாவது நேரடியாகப் புகழ்வது; மற்றவர்களிடம் திட்டுவது இது சற்றும் சரிப்பட்டுவராத செயல்.

இதை மாற்றிக்கொண்டால் வியக்கத்தக்க பலன்கள் கிடைக்கும்?

**லேனா தமிழ்வாணன்**

"நம்பிக்கை, சகிப்புத் தன்மை, துணிவு, உறுதி" ஆகிய நான்கு ஆயுதங்களால் நாம் விரும்பும் எதனையும் சாதித்து விடலாம். – தமிழ்வாணன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆதிக்குடிகளான தமிழர்களின் தொன்மையைப் பாதுகாப்போம்!

உலகின் மூத்த மொழியான தமிழ் மொழி செம்மொழி எனப்பெருமைப்படுத்தப்பட்டுள்ளது.

உலகிலுள்ள பல மொழிகளின் தாய் மொழியாக – மூல மொழியாக தமிழ் மொழி இருந்துள்ளதென்பதை மொழியியலாளர்கள் ஏற்றுள்ளனர்.

உலகின் மூத்த மொழியாகிய தமிழின் இருப்பிடம் பற்றி ஆராயும் போது; இமயம் முதல் குமரி வரை கோலோச்சிய தமிழ், ஈழத் திருநாட்டின் முழுமையிலும் அரசாட்சி செய்திருந்தென்பதை வரலாற்றுச் சான்றுகள் ஆதாரப்படுத்தி நிற்கின்றன.

திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆய தலங்களைப் பாடிப்பரவிய நாயன்மார்களின் தேவாரத் திருமுறைகளும் கதிர்காமப் பெருமாளே! என்று சந்தத்துடன் பாடிய அருணகிரிநாதரின் திருப்புகழும் ஈழமண்ணை சிவபூமி என்று வியந்து போற்றிய திருமூலரின் திருவாக்கும் இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர்கள் என்பதை உறுதி செய்யும்.

இவை ஒருபுறமிருக்க, இலங்கை வேந்தன் இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன் என்பதும் இயக்கர், நாகர் என்ற இனத்தவர் தமிழ்க் குடிகள் என்பதும் இங்கு ஈண்டு கவனிக்கத்தக்கவை.

நிலைமை இதுவாக இருக்கையில், இலங்கையின் மூத்த குடிகள் சிங்களவர்கள் என்பதை நிரூபிப்பதில் பௌத்த பீடங்களும் ஆட்சித் தரப்புகளும் தொல்லியல் திணைக்களமும் கங்கணம் கட்டி நிற்கின்றன.

அதிலும் தமிழர்களின் தொல்லியல் சான்றாதாரங்கள் இருக்கக்கூடிய இடங்களைத் தமதாக்குவதில் சிங்களத் தரப்புகள் மும்முரமாக இருக்கின்றன.

பக்தி மொழியாகப் போற்றப்படும் தமிழின் பெருமையும் சிறப்பும் பழமையும் நாயன்மார்கள் அருளிய தேவாரத் திருமுறைகளிலும் ஆழ்வார்கள் அருளிய திவ்விய பிரபந்தங்களிலும் செறிந்து கிடக்கின்றன.

அந்த வகையில், ஈழத்தின் மூத்த குடிகள் தமிழர்கள் என்பதைச் சான்றுப்படுத்தும் தொன்மைமிகு சிவாலயங்கள் அமைந்த இடங்களில் பௌத்த விகாரைகள் இருந்ததாகக் காட்டுவதிலும் அங்கு அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்டு பௌத்த எச்சங்கள் இருப்பதாகக் கதை விடுவதிலும் தொல்லியல் திணைக்களம் உள்ளிட்ட சிங்களத் தரப்புகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இவ்வாறு தமிழினத்தின் தொல்லியல் சான்றுகளைத் திட்டமிட்டு அழிக்கின்ற இந்த ஆபத்தான நேரத்தில், இலங்கை முழுவதிலும் உள்ள தமிழினத்தின் தொல்லியல் சான்றுகளைப் பாதுகாப்பதில் ஒவ்வொரு தமிழ் மகனும் மிகத் தீவிரமாக ஈடுபட வேண்டும்.

அதிலும் குறிப்பாக அழிவுற்ற நிலையில் இருக்கக்கூடிய தொன்மைமிகு சிவாலயங்கள் மற்றும் சிவசின்னங்கள் புதைந்திருக்கக் கூடிய இடங்களைப் பாதுகாப்பதிலும் அடையாளப்படுத்துவதிலும் நம்மவர்கள் மிகுந்த கருசனை காட்ட வேண்டும்.

இதற்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக பூநகரி மண்ணித்தலை சிவன் ஆலயத்தின் புனரமைப்புப் பணி அமைகிறது. இந்தப் பணியோடு பொலனறுவை சிவன் ஆலயம், கதிர்காமக் கந்தனின் ஆட்சியுரிமை என அனைத்திலும் எங்கவின் உரிமையை நிலைநாட்ட வீறு கொண்டெழுவோம்.

# அரசாங்கத்தை பாதுகாப்பது கடினம்

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கைவிரிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தைப் பாதுகாப்பது மிகவும் கடினம் என வெளிவிவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கண்டி அஸ்கிரிய பீடத்திற்குச் சென்ற அவரிடம் ஊடகவியலாளர்கள் தொடுத்த கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இதனை அவர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்போது மேலும் பதில் வழங்கிய அவர்,

"கூட்டணி அமைத்துள்ள அரசாங்கத்திற்குள் பல்வேறு கருத்துக்கள் இருக்கும். இது இயல்பான ஒன்று. ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு கொள்கை இருக்கின்றது. என்னதான் இருந்தாலும் இறுதியில் அரசாங்கமே நிலைபெறுகின்றது.

ஏற்படுகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு எமது நாட்டில் சக்தியுள்ளது. மக்கள் எமது அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, அதிகாரத்தை வழங்கியுள்ளார்கள். அந்த விசுவாசத்தையும் அரசாங்கத்தையும் பாதுகாக்க வேண்டும்.

பல்வேறு தரப்பினரின் தியாகம், அர்ப்பணிப்பில் உருவாக்கப்பட்ட அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டும். சில நேரங்களில் அரசாங்கத்தை அமைப்பதை விட அமைத்த அரசாங்கத்தைப் பாதுகாப்பது கடினமானது.

ஆகவே பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது இலகுவானது. அரசாங்கத்திற்குள் பிரச்சினை இருப்பது இயல்பானது. அதனை தீர்த்துக் கொள்ள முடியும். பிரச்சினையில்லாத அரசாங்கம் இந்த நாட்டில் இருந்துள்ளதா? எனவே இதனைக் குறித்து அலட்டிக் கொள்ளத் தேவையில்லை என்றார். (ம-3)

# பாராளுமன்ற உறுப்பினராக பசிலை நியமித்தது செல்லுபடியற்றது

## மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு

(கொழும்பு)

பசில் ராஜபக்சவை பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தமை செல்லுபடியற்றது என உத்தரவிடக் கோரி உலப்பனே சுமங்கள தேரர் உட்பட மூன்று பேர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளனர்.

நிதியமைச்சர் பசில் ராஜபக்ச, பாராளுமன்ற செயலாளர் நாயகம் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இரட்டை குடியுரிமை கொண்ட பசில் ராஜபக்ச பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்தமையை அடிப்படையாக கொண்டு இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சுமங்கள தேரர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 08 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** கூமாங்குளம் சாய் சிறுவர் இல்லம், ஆச்சிபுரம், ஆசிக்குளம், எல்லப்பர் மருதங்குளம் கோவிலடி, கற்குளம் (சிதம்பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, மகாமயிலங்குளம், மகாமயிலங்குளம், மதுரநகர் கல்நாட்டின குளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பரபுரம், குருக்கள் புதுக்குளம், மணியர்குளம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும். (நி-4)

# கொரோனா ஆபத்திலிருந்து நாடு விடுபடவில்லை

## சுகாதாரப் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)

தொடர்ச்சியான எச்சரிக்கைகள் விடுக்கப்படுகின்றபோதும், பொது மக்கள் அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களையும் புறக்கணிப்பதால், எதிர்காலத்தில் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்க அதிகாரிகள் நிர்ப்பந்திக்கப்படலாம் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.


இலங்கை கோவிட் வைரஸ் தொற்றிலிருந்து விடுபட்டதுபோல் மக்கள் நடந்து கொள்வதாகவும் அவர் ஊடகங்களிடம் குறிப்பிட்டுள்ளார். (ம-3)

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை 2021

"உலகம் நாளை துண்டுகளாக உடைந்து அழியப்போவதாக நான் அறிந்தாலும் இன்றும் ஒரு மரத்தை நடுவேன்."

-மார்ட்டின் லூதர்
(ஜேர்மனிய கத்தோலிக்க மதகுரு)

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



❖ தம் சிலுவையைச் சுமக்காமல் என் பின் வருபவர் எனக்குச் சீடராய் இருக்கமுடியாது.

❖ உப்பு நல்லது. ஆனால், அது உவர்ப்பற்றுப் போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்க முடியும்? அது நிலத்துக்கோ எருக்குழிக்கோ பயனற்றது. அது வெளியே கொட்டப்படும். கேட்கச் செவியுள்ளோர் கேட்கட்டும்"

❖ மனம் மாறத் தேவையில்லாத் தொண்ணூற்றொன்பது நேர்மையாளர்களைக் குறித்து உண்டாகும் மகிழ்ச்சியை விட, மனம் மாறிய ஒரு பாவியைக் குறித்து விண்ணுலகில் மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும்.

❖ நேர்மையற்ற செல்வத்தைக்கொண்டு உங்களுக்கு நண்பர்களைத் தேடிக்கொள்ளுங்கள். அது தீரும்பொழுது அவர்கள் உங்களை நிலையான உறைவிடங்களில் ஏற்றுக் கொள்வார்கள்.

❖ மிகச் சிறியவற்றில் நம்பத் தகுந்தவர் பெரியவற்றிலும் நம்பத் தகுந்தவராய் இருப்பார். மிகச் சிறியவற்றில் நேர்மையற்றவர் பெரியவற்றிலும் நேர்மையற்றவராய் இருப்பார்.

❖ "எந்த வீட்டு வேலையாளும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்யமுடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு கொள்வார் அல்லது ஒருவரைச் சார்ந்து கொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்யமுடியாது."

# காரைநகர் பிரதேச சபைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

(அராலி)

காரைநகர் பிரதேச சபையின் புதிய உறுப்பினராக கைலாயபிள்ளை நாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

சபையின் தமிழரசுக் கட்சியின் தவிசாளர் அண்மையில் காலமானதையிட்டு உறுப்பினருக் கான வெற்றிடம் ஒன்று ஏற்பட்டது.

இந் நிலையில் சபையின் வலந்தலை வட்டார உறுப்பினராக நாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார் என பிரதேச சபையின் தெரிவத்தாட்சி அலுவலர் ராஜேந்திரன் கிறிஸ்ரி அமல்ராஜ் தெரிவித்தார்.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் கடந்த 2ஆம் திகதி வெளியிடப்பட்டது. (4-104)

# மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அரச அதிபர் விஜயம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழையால் மாவட்டத்தின் பல பாகங்களிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளமையால் மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பல்வேறு கிராம மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்துள்ளனர்.

மேலும் மன்னார் மூர் வீதி , உப்புக்குளம் , பள்ளிமுனை , சாந்திபுரம் , சௌத்பார் பனங்கட்டுகொட்டு , எமில் நகர் உள்ளிட்ட பல கிராமங்களில் உள்ள பல வீடுகளில் மழை நீர் சூழ்ந்துள்ளது.

தலை மன்னார் ஊர் மனை கிராமத்தில் கடந்த 4 நாட்களாக வெள்ள அனர்த்தம் காரணமாக தலைமன்னார் ஊர்மனை கிராமத்தின் வடக்கு மற்றும் தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளில் சுமார் 50 குடும்பங்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளன.

மழைநீர் தமது வீட்டிற்குள் புகுந்த நிலையில் குறித்த குடும்பங்கள் தங்களுடைய உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த பகுதி மிகவும் தாழ்வான பிரதேசம் என்பதால் மழை வெள்ள நீரை வெளியேற்றுவதில் பாரிய சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

இந்த நிலையில் குறித்த பகுதிக்கு நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஏ. ஸ்ரன்லி டிமேல் தலைமையில், மன்னார் பிரதேச செயலாளர் எம். பிரதீப் மற்றும் கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட கிராம மக்களின் பிரதிநிதிகள் குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

இந்த நிலையில் குறித்த ப்குதியில் தேங்கி உள்ள வெள்ள நீரை வெளியேற்றுவதற்கான நடவடிக்கையை கிராம மக்களுடன் இணைந்து மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர். (4-285)

# மரம் முறிந்து வீழ்ந்ததில் மின் வடங்கள் சேதம்

## போக்குவரத்தும் பாதிப்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது.

இந் நிலையில் நேற்று முன்தினம் வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் பாடசாலை நுழைவாயிலுக்கு அருகில் காணப்பட்ட வேப்ப மரமும் பனை மரமும் முறிந்து வீழ்ந்ததில் அப் பாதையின் போக்குவரத்து தடைப்பட்டது.

மின்சார சபை மற்றும் ரெலிகொம் வயர்களும் சேதமடைந்தன. குறித்த சம்பவம் தொடர்பில் உரிய தரப்பிற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து மின்சார சபை, ரெலிகொம் ஊழியர்கள் வருகை தந்திருந்தனர். பின்னர் குறித்த ஊழியர்கள் ,கரைச்சி பிரதேச சபை, பாடசாலை சமூகம் சேர்ந்து மரங்களை விரைவாக அகற்றினர். (4-316)

# மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

மாங்குளம் சுற்றுலா நீதிமன்றத்தினால் பறிமுதல் செய்யப்பட்டு, அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏலவிற்பனை எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு மாங்குளம் சுற்றுலா நீதிமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ளது என முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# வெள்ளம் வழிந்தோட வழிசெய்து தரவும்

## பொதுமக்கள் கோரிக்கை



(அக்கராயன்)

முல்லைத்தீவு உடையார்கட்டு நகரம் அதனை அண்டிய சூழலில் வடிகால்கள் அமைக்கப்படாததன் காரணமாக மழை வெள்ளம் தேங்கி நிற்பதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். உடையார்கட்டு மகா வித்தியாலயம், உடையார்கட்டு ஆரம்ப வித்தியாலயம் , பொதுச் சந்தை ஆகிய பகுதிகளில் கூடுதலாக வெள்ளம் தேங்கி நிற்பதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டினர்.

கடந்த 10ஆண்டுகளாக இந்த நிலையே தொடர்வதாகவும் தெரிவித்தனர். குறிப்பாக புதுக்குடியிருப்பு பிரதேச சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றிற்கு பலதடவை கோரிக்கை விடுத்தும் எந்தவித பலனும் ஏற்படவில்லை எனவும் தெரிவித்தனர். (4-350)

# அபிவிருத்திப் பணிகள் நிறுத்தம்; போக்குவரத்தில் சிரமம்

(அக்கராயன்)

கிளிநொச்சி பல்லவராயன் கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரை நடைபெற்ற வீதி வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர் சி.சிறிரஞ்சன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து பாலாவி வரையான 17 கிலோமீற்றர் வீதி வேலைகள் நடைபெற்று வந்த நிலையில் கடந்த ஒன்றரை மாதங்களாக குறித்த வேலைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

இவ் வேலையில் சம்பு வெளிப் பகுதியில் 14 மதகுகள் அமைக்கப்பட்டுள்ளன. அரைகுறையாக வேலைகள் நிறுத்தப்பட்டிருப்பதன் காரணமாக கிராஞ்சி, வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு, பாலாவி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 1,000 [illegible] மேற்பட்ட குடும்பங்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர்.

கடந்த ஆண்டு பெரும் மழையின் போது கரியாலை நாகபடுவான் குளம், பல்லவராயன்கட்டுக் குளம் என்பன குறித்த வீதியினை சம்பு வெளிப் பகுதி வீதியை மூடிப் பாய்ந்ததன் காரணமாக மேற்படி கிராமங்களின் மக்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டனர்.

வேரவில் பிரதேச வைத்தியசாலை நோயாளர் வண்டி முழங்காவில் ஆதார வைத்தியசாலைக்கோ கிளிநொச்சி பொது வைத்தியசாலைக்கோ நோயாளர்களை கொண்டு செல்ல முடியாத அவலம் காணப்பட்டது. தற்போது குறித்த வீதி வேலைகளும் அரைகுறையாகக் காணப்படுகின்ற நிலையில் கடந்த ஆண்டினை விட இவ்வாண்டு வெள்ள அபாயம் மிகுந்த பகுதியாக குறித்த வீதி காணப்படுகின்றது எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார். (4-350)

# முக்கொம்பனுக்கான பேருந்து சேவை நாளை முதல் ஆரம்பம்



(அக்கராயன் )

கிளிநொச்சி பூநகரி முக்கொம்பன் மகா வித்தியாலய ஆசிரியர்களின் போக்குவரத்து வசதி கருதி இலங்கை போக்குவரத்து சபை பேருந்து சேவையினை நடத்த் உள்ளது. அக்கராயனில் இருந்து கந்தபுரம் முக்கொம்பன் வழியாக யாழ்ப்பாணத்திற்கு நடைபெற்ற பேருந்து சேவை கந்தபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையில் வீதி கடுமையாக சேதமடைந்தமையினால் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் நிறுத்தப்பட்டது.

இதன் காரணமாக முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு செல்லும் ஆசிரியர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டனர். இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து நாளை 8ஆம் திகதி காலை 5.45 மணிக்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து பயணித்து கைதடி, சாவகச்சேரி, பூநகரி, 10ஆம் கட்டை வழியாக முக்கொம்பன் கிராமத்தினை சென்றடைந்து மீளவும் முக்கொம்பனில் இருந்து 10 ஆம் கட்டைச் சந்தி, பரந்தன், கிளிநொச்சி, திருமுறிகண்டி, அக்கராயன் வரை பேருந்து பயணிக்க உள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி கிளை முகாமையாளர் வை. கிருஸ்ணகுமார் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அக்கராயனுக்கு தாமதமாக பேருந்து சென்றடையுமானால் நேரங்களில் மாற்றம் ஏற்படலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-350)

## 20 பேர் பலி ...

களில் 10 ஆண்களும் 10 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக் களம் தெரிவித் துள்ளது.

30 முதல் 59 வயதுக்கு இடைப்பட்ட 3 ஆண்களும் 3 பெண்களும் என 6 பேர் மரணித்தனர். 60 வயதுக்கு மேற்பட்ட 7 ஆண்களும் 7 பெண்களும் என 14 பேர் மரணித்தனர். (ம-03)

## விபத்துக்குள்ளா ...

நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீதியால் நடந்து சென்றவரை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த நபர் படுகாயமடைந்தார். படுகாய மடைந்தவரை உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இதில் மட்டுவில் வடக்குப் பகுதியைச் சேர்ந்த 60வயதான கந்தையா லோகநாதன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (ம-03,30)

## 177 ரூபாயால் ...

அதனடிப்படையில் புதிய விலை ஆயிரத்து 275 ரூபாயாக மாற்றமடையவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் 50 கிலோ கிராமுடைய சீமெந்து பக்கெட் ஒன்றின் விலையை 98 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-03)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 06/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1160
வெற்றி இலக்கங்கள்
கடகம் 7 8 1 2 0 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 06/11/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0926
Y 09 34 37 38 71

மஹஜன சம்பத
திகதி 2021/11/06
சீட்டிழுப்பு இலக்கம் 4578
A 2 2 2 0 0 4
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 06.11.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2873
M 19 22 29 30
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.11.06
சீட்டிழுப்பு இலக்கம் - 608
S 02 04 16 56
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

## பயணிகளை ...

முழமை காலை பூநகரி சங்குப்பிட்டிப் பாலத்தடியில் திடீர் சுகயீனமுற்று மயக்கமடைந்துள்ளார்.

மயக்க நிலையில் காணப்பட்டவரை உடனடியாக மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு ஏற்றிவந்த போதிலும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

வவுனியா பகுதியைச் சேர்ந்த 61வயதான ஜெயராசா என்பவரே இவ்வாறு ஆயம் ஒன்றிற்கு ஆட்களை ஏற்றிவந்த சமயம் திடீர் சுகயீனமுற்று உயிரிழந்துள்ளார். (ம-03,30)

## கிணற்றில் ...

சென்ற மாணவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். சுழிபுரத்தில் நேற்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மூளாய் பகுதியைச் சேர்ந்த பிரபாகரன் ரஜீவன் (வயது 18 ) என்ற மாணவனே மரண மானவராவார்.

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் வசிக்கும் மாணவன் ஒருவர் தனது நண்பர்களுடன் பாடசாலையில் சிரமதானம் செய்யப் போவதாக கூறிவிட்டு சுழிபுரம் - திக்கரை பகுதியில் உள்ள கிணறு ஒன்றிலே நீந்துவதற்காக சென்றிருந்தார்.

இந்நிலையில் அவர் நீந்திக் கொண்டிருக்கும்போது திடீரென நீரில் மூழ்கியுள்ளார். இதனை அவதானித்த அவரது நண்பர்கள் அயலில் உள்ளவர்களை அழைத்து அவரை காப்பாற்றி மூளாய் வைத்தியசாலைக்கு கொண்டு சென்றிருந்தனர்.

மூளாய் வைத்தியசாலையில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவரது உயிர் பிரிந்தது. (ம-03,104)

## +617 ...

எதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 544,630 ஆக அதிகரித்துள்ளது. (ம-03)

## இன்றும் நாளை...

இன்றும் நாளையும் மழையுடன் கூடிய காலநிலை நீடிப்பதுடன், குறித்த காலப் பகுதியில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சியும் காணப்படும். இக்காலப்பகுதியில் காற்று, மின்னல் ஆகியவற்றின் தாக்கங்களிலிருந்து மக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு யாழ்.மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவித்துள்ளது. (ம-03,33)

## புங்குடுதீவில்...

புங்குடுதீவு தென்கிழக்கு வல்லன் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான 14 ஏக்கர் 2 காணிகளும், மறுநாள் 09 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை புங்குடுதீவு பத்தாம் வட்டாரம் கடற்கரையினை அண்டிய பகுதியில் மணியம் தோட்ட வீதியை அண்மித்ததாக அமைந்துள்ள காணியொன்றும் கடற்படையினரின் முகாம் அமைப்பதற்காக அபகரிக்கப்படவுள்ளது.

இதேவேளை, கடந்த காலங்களில் இரு தடவைகள் குறித்த காணிகளை கடற்படையினர் அபகரிக்க முயன்றபோதிலும் தாம் முன்னெடுத்த எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக அம்முயற்சி இடைநிறுத்தப்பட்டதாகவும் மீளவும் தற்போது முன்னெடுக்கப்படவுள்ள மேற்படி காணி அபகரிப்பினைத் தடுத்து நிறுத்துவதற்கு அனைவரையும் உரிய தினங்களில் மேற்படி பகுதிகளில் ஒன்று கூடுமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (ம-03,18)

## இராஜாங்க ...

யாழ்நர். நேற்று, சனிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் மேற்கொண்ட இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் துறை பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்தக் கலந்துரையாடலின்போது, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் தொல்லியல் துறை தொடர்பாகக் கேட்டறிந்து கொண்டதுடன், அங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடினார்.

அதன்பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள தொல்லியல் துறையின் அருங்காட்சியகம் மற்றும் தொல்லியல் ஆய்வுகூடத்தையும் இராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க பார்வையிட்டார்.

இச்சந்திப்பின் போது, தேசிய மரபுரிமைகள், அருங்கலைகள் மற்றும் கிராமிய சிற்பக்கலைகள் மேம்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி. நிஷாந்தி ஜெயசிங்க, இலங்கை தொல்லியல் திணைக்களப்பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க, யாழ் பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் கே.சுதாகர், யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத் தலைவர் கலாநிதி கே. அருந்தவராஜா, வரலாற்றுத் துறை ஓய்வுநிலை விரிவுரையாளர்களான கலாநிதி ப.புஷ்பரட்ணம், கலாநிதி கே. சிற்றம்பலம், கலாநிதி ச.சத்தியசீலன், கலாநிதி செ.கிருஷ்ணராஜா உட்பட விரிவுரையாளர்கள் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ். பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் கே. சிவராம், தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் மற்றும் தொல்லியல்துறையினர், மாணவர்கள் உட்பட்ப் பலர் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் நிறைவில் இலங்கை தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்கவினால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்திற்கு நூல் ஒன்றும் அன்பளிப்பு செய்யப்பட்டது.(ம-03)

## இராணுவ ...

முறையிலான் நபர் என்றே நாம் எதிர்பார்த்தோம் என்று சிலர் கூறுகின்றார்கள்.

என்னால் அது முடியும் எனினும் கழுத்தை நெரித்து இராணுவத்திலுள்ள ஒருவரைப் பயன்படுத்தி சேதனப்பசளையை கட்டாயம் பயன்படுத்து என்று என்னால் விவசாயிகளுக்கு கூறமுடியும்.

அவ்வாறான தேவை எனக்கு இல்லை. நான் வந்தால் ஜனநாயகம் இல்லாமல் போகும் என்று சிலர் கூறினர்.

ஐயோ! இவ்வாறான ஒருவரை எதிர்பாரர்க்கவில்லை என்று, இன்று அவர்களே கூறுகின்றனர்.

இராணுவத்தைப் போன்ற ஒருவரை எதிர்பார்த்ததாகக் கூறுகின்றனர். வேண்டுமானால் அவ்வாறு என்னால் செயற்பட முடியும் என்றார். (ம-03)

## எரிபொருள் ...

காயமடைந்ததாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்தக் கோர விபத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கையை அரசாங்கம் இன்னும் உறுதிப்படுத்தவில்லை. (ம-03)

அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1381
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 06.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,710,900
வெற்றி இலக்கங்கள் 16 51 69 76 ஆங்கில எழுத்து L
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3716
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 06.11.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,203,960
வெற்றி இலக்கங்கள் 28 39 64 65 ஆங்கில எழுத்து B
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் ரூ.4,667,883/-
Draw Date திகதி 2021 / 11 / 06
Draw Number வெற்றி வாரம் 3267
வெற்றி இலக்கங்கள் 11 19 23 60
மிதுனம்
Colour வர்ணம் இள நீலம்
Total Value of Prizes வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 7,875,760/-

SUPER BALL
Draw Number சீட்டிழுப்பு வாரம் 1555
Colour நிறம் நீலம்
Full Draw Date சீட்டிழுப்பு திகதி 2021 / 11 / 06
Week Days Name தினம் சனி
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் V 10 13 62 73
Total Value of Prizes 2,684,980/-

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 099
சீட்டிழுப்பு திகதி 06.11.2021
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 07 37 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,359,580/-

சம்பத் வாசனாவ
திகதி : 2021-11-06
வெற்றி வாரம் : 457 | வர்ணம் : சிவப்பு
சுப்பர் ஜக்பொட் ரூ. 10,509,756/-
ஆங்கில எழுத்து S வெற்றி இலக்கங்கள் 16 65 24 ராசி எண் 9
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,082,260/-
ரூ. 10,609,596/-
அபிவிருத்தி லொத்தர் சபை

## வேலைக்கு ஆள் தேவை

பெண் தட்டெழுத்தாளர். தமிழ் + ஆங்கிலம் இரண்டும் கொம்பியூற்றரில் எழுதத்தக்கவராக இருக்க வேண்டியவர்.
ஊதியம், நேரம் நேரில் கதைக்கலாம்.

தொடர்பு (C-2970)

Whatsapp:- +41 77 924 63 14 only sms on Sunday & Tuesday.



## நீங்கள் வேலை தேடுபவரா?

அதிகுறைந்த தகைமை - தரம் 10, O/L
வயது எல்லை 15 - 35
3 மாத பயிற்சியின்பின் நிரந்தர வேலை. பயிற்சியின்போது சம்பளம் வழங்கப்படும்.( விதி முறைகளுக்கு உட்பட்டது.)

பதவிகள் (8537)

- Distributor
- Manager
- Supervisor
- Administrative
- Assistant manager
- Store keeper

No.28, 3rd Cross street, Jaffna.
076 269 1035
076 854 2146



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா?
நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக் கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும்.

(8507) 076 825 7716(ஆகாஸ்)


## உரிமைகளை ...

மனோ கணேசன் தெரிவிக்கையில், இன்று தமிழரசுக்கட்சி வரமுடியாது விட்டாலும் கூட தொடர்ச்சியாக பங்குபற்றிவர வேண்டும் என்ற எமது விருப்பத்தை நாம் தெரிவித்திருந்தோம். அந்தக் கலந்துரையாடல்களுக்கு வழிகாட்டியாக சம்பந்தன் செயற்படவேண்டும் என்றும் நாம் அவருக்கு எடுத்துக் கூறியிருந்தோம். அத்துடன் ஏனைய ஈபிஆர்எல்எப், புளொட், ரெலோ, தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி போன்ற அனைத்துக் கட்சியினரும் தமிழரசுக் கட்சியுடன் சேர்ந்தே பயணிக்கவேண்டும் என்ற ஒருமித்த விருப்பம் அவர்களிடம் உள்ளதனையும் தெரிவித்திருந்தோம்.

இச்சந்திப்பில் அதை ஏற்றுக்கொண்டு கருத்துக் கூறிய சம்பந்தன், இந்த சந்திப்புக்களில் தமிழரசுக் கட்சி கலந்து கொள்ளும். அத்துடன் தமிழ் மக்களின் ஐக்கியத்திற்கும் ஒற்றுமைக்கும் பாதகமாக செயற்பட மாட்டோம் எனவும் இதுவே நாடுபூராகவுமுள்ள தமிழ் மக்களின் விருப்பம் என்பதையும் அவர் ஏற்றுக் கொண்டிருந்தார்.

தமது கட்சியின் ஏனைய அங்கத்தவர்களுடன் கலந்தாலோசித்து விட்டு எவ்வாறு இச்செயற்பாட்டிலே தமிழரசுக் கட்சி இணைந்து கொள்ளப்போகிறது என்பதை தமக்கு அறிவிப்பதாகவும் உறுதிமொழி வழங்கியிருக்கிறார்.

சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் இந்தச்சந்திப்பின்போது பேசியதாகவும் இந்தப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் இடம்பெறும் எனவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை வென்றெடுக்க ஒற்றுமையாக கையாள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகவும் அவர் கூறினார். (ம-03)


## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் Annex வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பம், அரசாங்க உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. (8520)

077 873 4805


## ஜீரணிக்க முடியவில்லை!

### பிரபாகரன் ரஜீவன்



தோற்றம் - 14.03.2003
மறைவு - 06.11.2021

தம்பி ரஜீவனின் இறப்பை ஜீரணிக்க முடியவில்லை! எமது ஆழ்ந்த அனுதாபங்கள்! தினமும் காலையில் பூப்பறித்து - ஆலயத்தைக் கூட்டித் துப்புரவாக்கியவனின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல வரதன்புலோவானைப் பணிகின்றோம்!

(C-2973)

மூளாயூர் நண்பர்கள்


## IELTS

DMI COMPUTER EDUCATION 0777 17 35 17

- #Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
- # Unique Test Tips
- # 40 hrs with free 4 mock exam
- # Latest course Material (Book 16)

Academic or General

IELTS Life Skills - A1
திருமணம் செய்து UK செல்வோருக்கானது

DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்

யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 10/11/2021 Wed 9:30 am
SPOKEN ENGLISH நேரடி வகுப்புக்களாக

German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-2963)

DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சுண்டிக்குளி / சந்தி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |


## ஈராண்டு நினைவு நாள்

### செல்வன் சிவானந்தமூர்த்தி புகலவன்

பிறப்பு - 24.08.2009
இறப்பு - 07.11.2019





ஈராறு ஆண்டின் பின் இவ்வுலகில் வந்துதித்தாய்
ஈரைந்து வயதினிலே காலன்
ஏன் தான் பறித்தானோ?
தினமும் உன்னை குறிஞ்சிக் குமரன் என்போம்
திக்கற்று திரிந்த போது காப்பாற்றிய
தெய்வம் நீயேதான்!

கூடிக் குலாவி குறும்புகள் பல செய்து
குதூகலித்து வாழ்ந்த காலத்தின்
கூட்டைப் பிடுங்கி எறிந்து விட்டான் காலன்
எங்கள் அன்புத் தெய்வம் நீயன்றோ
என்றும் எம்முடன் வாழ்வாய்
உன் விழி தினமும் எம் கண்ணீர் தான்
உன்னையன்றி வேறு தெய்வம் எமக்கில்லை

ஈராண்டு சென்றாலும்
ஈகையான் உன் நினைவு தான்...

(C-2972)

குடும்பத்தினர்


விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-975 /=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-2918)

0768226240 DHL



## பெண் வேலையாட்கள் தேவை

மல்லாகத்தில் இயங்கும் எமது தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண் வேலையாட்கள் தேவை. வயது எல்லை 18 - 30 வரை. வேலை நேரம் காலை 7.30 மணி - 5.30 மணி வரை.
மாத வேதனமாக 17,000/= - 25,000/= வரை வழங்கப்படும். (8512)

074 049 0003



நீங்களும் விரைவில் அமெரிக்காவில்... நாளையுடன் பதிவுகள் நிறைவடைகின்றன

## அமெரிக்க அதிஸ்ட விசா



ஒரு தடவை மட்டும் பதிவுசெய்து கிடைக்காமல் அலுத்தக்கொண்டால் இந்தத்தடவை உங்களுக்குரிய வெற்றிவாய்ப்பை இன்னொருவருக்கு நீங்கள் விட்டுக்கொடுக்கிறீர்கள் என எடுத்துக்கொள்ளலாம்.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
இந்த வருடம் A/L எடுக்கின்றவர்களும் விண்ணப்பிக்கலாம்
55000 இலவச விசாக்கள்
0768226244

எம்மூடாக அமெரிக்கா சென்றவர்களில் சிலர் இவர்களைப்போல நீங்களும் அமெரிக்கா செல்ல உடனடியாக விண்ணப்பியுங்கள். (C-2919)



அமெரிக்கா விசா வெற்றியாளர்கள்

V2 Travels

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | சாவகச்சேரி | திருகோணமலை |
|---|---|---|---|---|
| 0777068777 | 0768226240 | 0776699892 | 0768226242 | 0768226237 |
| மானிப்பாய் | சுன்னாகம் | புதுக்குடியிருப்பு | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
| 0768226238 | 0764550670 | 0764550673 | 0768226230 | 0776697960 |



## Water Proofing நீர்க்கசிவை தடுப்பதற்கு

உங்கள் இல்லங்கள், நிறுவனங்கள், சீமேந்திலான கட்டடங்கள், நீர்த்தாங்கிகள் போன்றவற்றில் ஏற்படும் நீர்க்கசிவுகளை 10 வருட உத்தரவாதத்துடன் நிறுத்தித் தருகின்றோம்.

யாழ். மாவட்டத்தில் காரியாலய விலாசம் இல்லாத போலிகளைக் கண்டு ஏமாறாதீர்.

Finex இன் ஏக விநியோகஸ்தர் ஆகிய எம்மிடம்

- கூடிய விலைக் கழிவுடன் இரசாயனங்களை பெற்றுக்கொள்ளலாம்.
- ஒரு சதுர அடிக்காக எம்மால் 130 ரூபா அறவிடப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் முதல் முதல் அறிமுகம் செய்தவர்கள் (8531)

North and East Engineering
No. 55, Stanly Road, Jaffna.

077 524 4177
077 232 3000
021 222 2363


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 317

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 07.11.2021 தொலைபேசி : 021 222 3378

## கூடிக் கதைப்பதால் பயனேதும் உண்டோ பராபரமே



## வீறு கொள்கிறது சைவ சமயம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் வாழ்ந்த இடத்தில் அமைந்திருக்கக்கூடிய நாவலர் கலாசார மண்டபத்தை இந்து கலாசார அமைச்சிடம் அல்லது சிவபூமி அறக்கட்டளையிடம் ஒப்படைக்குமாறு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அவரின் கோரிக்கைக்கு ஆதரவாக ஆலடியில தீர்மானம் நிறைவேற்ற வேணும்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் விறுக்கென எழுந்த விதானையார் விசுவலிங்கம் அதனை வழிமொழிய, குறித்த தீர்மானம் ஆலடியில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தீர்மானம் நிறைவேற்றி முடிந்ததும் சாத்திரியார் சதாசிவம் மெல்ல எழுந்து இந்த விடயத்தில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன் என்றார்.

(சாத்திரியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில் இருந்தவர்கள் சாத்திரியாரை உன்னிப்பாகப் பார்த்தனர்).

சாத்திரியார்: என்னைப் பொறுத்தவரை இந்து அமைப்புக்கள் தமிழர்களின் அரசியலைத் தீர்மானிக்கின்ற சக்தியாக மாறவேணும். சும்மா முகநூலிலும் வைபர் குறூப்பிலும் எழுதினால் மட்டும் போதாது. இந்து அமைப்புக்கள் வேகம் கொண்டெழுந்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்த வேணும்.

நான் கேட்கிறேன் நாவலர் கலாசார மண்டபம் கத்தோலிக்கர்களுக்குரியதாக இருந்தால், அந்த மண்டபத்தில வைத்து நாய்களுக்கு ஊசிபோட முடியுமோ?

அப்படி ஊசி போட்டால் சம்பந்தப்பட்டவர்களுக்கு என்ன நடக்கும்? என்பது தெரியும் தானே.

என்ன செய்யிறது. நாவலர் கலாசார மண்டபம் சைவசமயத்திற்குரியதென்பதால, அங்க நாய்களுக்கு ஊசி போடலாம், ஆடறுத்து விழா நடத்தலாம், கட்டிய உடுப்பை காயவிடலாம் என்ற நிலைமை இருக்குது. இதற்குக் காரணம் எங்கட இந்து அமைப்புக்களின் பலயீனம் தான்.

கங்காணி: அப்ப என்ன செய்யவேணும் சாத்திரியார்.

சாத்திரியார்: சைவ சமயத்திற்கு எதிராக நடக்கிற நிந்தனையைக் கண்டித்து ஒரு பெரும் ஆர்ப்பாட்ட பேரணியை நடத்திப் பாருங்க. எல்லாரும் தன்பாட்டில வளத்திற்கு வருவினம்.

சிறாப்பர்: உண்மைதான். திருக்குறள் பேசுபவனை திருக்குறளால வெல்ல வேணும். வாள் வைத்திருக்கிறவனுக்கு வாளாலதான் பதிலளிக்க வேணும். இதை விட்டிட்டு வாள்கொண்டு வருகிறவனுக்கு திருக்குறள் சொன்னால் திருக்குறள்தான் தோற்றுப் போகும்.

பண்டிதர்: நேற்று முன்தினம் (05) நடந்த நல்லைக்குமரன் மலர் வெளியீட்டில் பேசின செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள் இன்னொரு விடயம் பற்றியும் சொல்லியிருக்கிறார்.

ஆரியர்குளத்தை மதச்சார்பற்ற இடமாக அறிவிக்கப்படுவது ஏற்புடையதல்ல. ஆரியர்குளம் என்பது இந்து சமயத்தின் அடையாளம். எனவே எங்கட சமய அடையாளத்திற்குரிய இடத்தை நாங்களே விட்டுக் கொடுக்கிறது அவ்வளவு நல்லதல்ல என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இதுவிடயத்தில கலாநிதி ஆறு.திருமுருகன் மிக இறுக்கமாகப் பேசியதாக கூட்டத்தில இருந்தவர்கள் சொன்னவியள்.

வாத்தியார்: அதுதான் ... அதுதான்... கலாநிதி ஆறு.திருமுருகன் போன்றவர்கள் கடும் தொனியில கதைக்க வேணும். அறிக்கை விட வேணும். சில அரசியல்வாதிகளின்ர பெயர்களைக்கூறி இவர்கள் சைவ சமயத்திற்கு அநீதி செய்கினம் என்பதை வெளிப்படையாகக் கூறவேணும். அப்படிக் கூறினால்தான் எங்கட சைவசமயத் தலைவர்களை ஆளுநர் சந்திப்பார், இராணுவத்தளபதி சந்திப்பார். நிதி ஒதுக்கீடு செய்கின்ற கூட்டங்களில சைவசமய மதகுருமாரும் பங்குபற்றவேணும் என்டு சில பிரதேச செயலர்களுக்கு நினைப்பு வரும். இல்லையெண்டால் அவர்களுக்கு சைவசமயம் பற்றி நினைப்பு வராது.

வாத்தியார் இவ்வாறு கூறியதும் ஆலடியில சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

விதானையார்: அது சரி, தமிழ்பேசும் அரசியல் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில சந்தித்துக் கூட்டம் நடத்தினவியள். அதில ஏதேனும் நன்மை இருக்கோ.

கங்காணி: நீதியமைச்சராக ரவூப் ஹக்கீம் இருந்தபோது எங்களுக்கு எதிராக ஜெனிவாவில பேசினவர். இப்ப அமைச்சர் பதவிக்குச் சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்றுது.

மூப்பர்: அதுமட்டுமல்ல கங்காணியார் கோட்டாபய ராஜபக்ஷவின்ர ஆட்சியில முஸ்லிம்கள் தலைநிமிர்த்த முடியாது என்பதும் தெரிந்ததால தமிழ் இனத்தோட சேர்ந்து போவதுதான் ஒரே வழி என்பதை முஸ்லிம் அரசியல்வாதிகள் மிகத் தெளிவாகப் புரிந்திருக்கினம்.

சாத்திரியார்: அதெண்டால் உண்மைதான். வடக்கில இருந்து முஸ்லிம் மக்களை வெளியேற்றியமை ஒரு துன்பியல் நிகழ்வு என்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தன்னிடம் கூறியதாக இப்பதானே ரவூப் ஹக்கீம் சொல்லுகிறார். இதை அப்ப சொல்லியிருந்தால் தமிழ்- முஸ்லிம் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை வலுத்திருக்குமல்லோ.

பண்டிதர்: என்ன செய்யிறது. ஆகுங்காலத்தேதான் ஆகவேணும் எண்டு விதியிருந்தால் ஆரென்ன செய்ய முடியும்.

இவ்வாறு பண்டிதர் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.



## முஸ்லிம்களை வெளியேற்றியமை துன்பியல் என்ற தகவலை...

ஆதித்தன்

# பொருளாதார வீழ்ச்சியை பொறுப்பேற்பது யார்?

> “பணத்தை அச்சிடும் வேலையினை அரசாங்கம் மேற்கொண்டால் அதன் விளைவு பாரதூரமாக இருக்கும் என்பதற்கான அச்சுறுத்தல் மணி அடிக்கப்பட்டு விட்டது. நாம் அனைவரும் அதை எதிர்கொள்ளத் தயாராகுவோம்.”



கொரோனாக் கோரத் தாண்டவம் உலகை விடுவதாய் இல்லை.

ஒன்று இரண்டல்ல பல தடுப்பூசிகள் கொரோனாவுக்கு எதிராக தயாரிக்கப்பட்டாலும் அவை பூரண வினைத்திறனுடையதா? என்ற கேள்விக்கு விஞ்ஞானிகளால் பதில் கூற முடியவிலலை.

ஏனெனில் கொரோனா வைரஸ் தன்னைத்தானே திரிபுபடுத்தி புதிய திரிபுகளால் மனித இனத்தைத் தாக்கத் தொடங்கியுள்ளன.

கண்ணுக்குத் தெரியாத இந்த கொடிய வைரசிற்கும் மனித குலத்திற்குமான போரில் இழப்பு முழுவதும் மனித குலத்துக்கே ஏற்பட்டுள்ளது.

உலகில் தன்னை விட்டால் ஆள் இல்லை என தமக்குத் தாமே தம்பட்டமடித்த உலக வல்லரசுகளையே போட்டுப் புரட்டி எடுத்து வருகிறது கொரோனா வைரஸ்.

கொரோனாவுக்கு இரையானவர்களின் எண்ணிக்கை உலகளவில் 50 இலட்சத்தைத் தாண்டிவிட்டது எனின் அதன் தாக்கம் எப்பேற்பட்டது என்பதைக் காண முடியும்.

உயிரிழப்பு என்பதையும் தாண்டி உலக நாடுகளின் பொருளாதாரத்தை அதள பாதாளத்திற்குள் தள்ளியுள்ளது இந்த வைரஸ்.

இந்தளவுக்கு உலக வரலாற்றில் பொருளாதாரப் பிரச்சினை எழவில்லை என்கின்றனர் ஆய்வாளர்கள்.

அபிவிருத்தியடைந்த நாடுகளின் நிலையே இது எனின் அபிவிருத்தி அடைந்து வரும், அபிவிருத்தி அடையாத நாடுகளின் நிலையை நினைத்தால் பயப்பீதி எழுகிறது.

உலக நிலை இதுவாக இருக்கையில், எமது நாட்டின் நிலை எப்படிப்பட்டது என்பதை நாம் கவனித்தே ஆக வேண்டும்.

தன்னிறைவுப் பொருளாதாரக் கொள்கை அற்ற அபிவிருத்தி அடைந்துவரும் நாடான இலங்கையில் தற்போது பாரிய பொருளாதாரப் பிரச்சினை எழுந்துள்ளதை உணரமுடிகின்றது.

கொரோனா தாக்கத்தின் விளைவு இது. எனினும் அபிவிருத்தி தொடர்பிலும் அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதி தொடர்பிலும் அக்கறை காட்டாததன் விளைவே இதற்குக் காரணம் எனலாம்.

ஒரு நாட்டின் முதுகெலும்பு எனக் கருதப்படுவது விவசாயம். அந்தவகையில் இலங்கையில் இரசாயன உர இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டு இயற்கை உரப்பாவனைக்கு விவசாயிகளை ஊக்குவிக்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இரசாயன உரப் பாவனையிலிருந்து இயற்கை உரப் பாவனைக்கு மாறுவது மிகவும் நன்மை பயக்கும் விடயமே.

ஆயினும் அது மிக நீண்ட செயற்பாட்டை உடைய ஒழுங்குபடுத்தப்பட்ட நிகழ்ச்சி நிரலினூடே மேற்கொள்ளப் படவேண்டிய விடயமாகும்.

இரசாயன உரம் பாவிக்கும் விவசாயிகளிடையே இயற்கை உரத்தை அறிமுகம் செய்து சிறியளவில் அவற்றை பரீட்சார்த்த முறையில் அறிமுகப்படுத்திக் கொஞ்சம் கொஞ்சமாக முற்றும் முழுதாக இயற்கை உரத்திற்கு மாறும் செயற்பாடாக இவை அமைய வேண்டும்.

ஆனால் இங்கு நடப்பதோ வேறு மாதிரியாக உள்ளது.

ஆம், இரசாயன உரத்தை உடன் தடை செய்து விவசாயிகளை இயற்கை உரப் பாவனையினை மேற்கொள்ளச் சொல்லப்பட்டுள்ளது.

இதன்விளைவு அரசுக்கு எதிராக நாட்டின் முதுகெலும்பான விவசாயிகள் போராடத் தலைப்பட்டுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் நாடுமுழுவதும் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

அண்மையில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

இயற்கை உரப்பாவனை இன்றியமையாதது. ஆனால் அதை ஒருபகுதியாக மேற்கொள்ள முடியுமே தவிர, ஒட்டுமொத் தத் தேவைக்கும் இயற்கை உரத்தைப் பயன்படுத்த முடியாது.

விவசாயத்தில் தன்னிறைவு அடைந்த நாடான அவுஸ்திரேலியாவில்கூட இயற்கை உரப் பாவனை மட்டும் எனும் செயற்பாடு இல்லை. இது விவசாயத்தையும் விவசாயிகளையும் பாதிக்கும் எனக் கூறியிருந்தார்.

நிலை இவ்வாறிருக்கையில், சீனி, கோதுமைமா, பருப்பு, பால்மா போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையினை நீக்கியுள்ளது அரசு.

இது பொருட்களின் விலையேற்றத்திற்கு வழிவகுப்பதுடன் வர்த்தக முதலைகள் பொருட்களின் விலைகளை நிர்ணயிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

அண்மையில் நிகழ்வொன்றில் அமைச்சர் சமல் ராஜபக்ஷ உரையாற்றுகையில், நாட்டில் அரிசுக்குத் தட்டுப்பாடு என்றால், அனைவரும் மரவள்ளிக் கிழங்கைச் சாப்பிடுங்கள் என அறிவுரை கூறியிருந்தார்.

இது கடையில் ஒருவர் போய் சீனி இருக்கா எனக் கேட்டதற்கு சர்க்கரை இருக்கிறது என பதில் கூறியதற்கு ஒப்பானது.

மரவள்ளிக்கிழங்கை அரிசிக்குப் பதிலாக உண்ணுங்கள் என ஒரு அமைச்சர் கூறியது பெரும்பான்மை சிங்கள மக்களுக்கு அதிர்ச்சியினை ஏற்படுத்தியிருந்தாலும் இது தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்காது என்பது உண்மை.

ஆம், 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வடபகுதிக்குப் பொருள் விநியோகம் தடைப்பட்டதனால் பொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. அப்போது வடக்கு தமிழ் மக்களின் பிரதான உணவாக மரவள்ளிக்கிழங்கு இருந்தது என்பதை பெரும்பான்மை உணர்ந்து கொள்ள வேண்டும்.

அரிசிக்குப் பதில் மரவள்ளிக்கிழங்கா? என அதிர்ச்சியடையும் தெற்கு அரிசிக்குப் பதில் மரவள்ளியைத் தமிழினம் உண்டது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஆகூ, கொரோனாவின் கோரத் தாண்டவத்தினால் இலங்கையின் பொருளாதாரம் மிக மோசமான நிலைக்கு வந்துவிட்டதை உணரமுடிகிறது.

நாம் இப்போது செய்ய வேண்டியது தன்னிறைவு வாழ்க்கைமுறை என்பதை நினைவுபடுத்துவோமாக.

பணத்தை அச்சிடும் வேலையினை அரசாங்கம் மேற்கொண்டால் அதன் விளைவு பாரதூரமாக இருக்கும் என்பதற்கான அச்சுறுத்தல் மணி அடிக்கப்பட்டு விட்டது. நாம் அனைவரும் அதை எதிர்கொள்ளத் தயாராகுவோம்.

அபிமன்யு



# சிறுவர் அரங்கம்

## பதவி மோகம்

"சந்தேகம் தேவையில்லை! சிங்கராஜா மீது புகார் செய்ற வேலையை நான் கவனிச்சுக்கிறேன். நான் சொல்றபடி நீ நடந்து கொண்டால் போதும்" என்றது நரி.

"சரி சரி... அப்படியே நடந்து கொள்கிறேன்" என்று தெம்புடன் கூறியது புலி. நரியும், புலியும் இவ்வாறு பேசியதை, நாவல் மரத்திலிருந்த கரடி, கேட்டுவிட்டது.

"ஓ! காட்டுக்குள்ராஜாவுக்கு எதிராக, இரண்டு சதிகாரர்கள் உருவாகி விட்டனர். இவர்களை விட்டுவிடக் கூடாது. இவர்களுக்கு எதிராக என்ன செய்யலாம்!" என்று யோசனையில் ஆழ்ந்தது கரடி.

சிங்கத்திற்கு எதிராக வழக்கு, நீதிமன்றத்தில் துவங்கப்பட்டது. அந்த வழக்கு, சிங்கத்திற்கு எதிரானது என்றதால், சிங்க இனம் தவிர, மற்ற மிருக இனங்களில் வயது முதியவர்களைக்கொண்ட நீதிமன்றத்தில், சிங்கராஜா மீது குற்றச்சாட்டுக்களை கூறியது நரி.



நரி கூறிய குற்றச்சாட்டை, நீதிபதிகள் கவனத்துடன் கேட்டன. அப்போது, சிங்க ராஜாவுக்கு ஆதரவாக கரடி ஆஜராகி, தன் வாதத்தை கூறத் தொடங்கியது.

"நீதிபதிகளே! தூக்கமும், குறட்டையும் சாதாரண விடயங்கள். குறட்டை இல்லாத தூக்கத்தை காண்பது அரிது. இந்தக் குறட்டைச் சத்தத்தை, குற்றமாக சொல்வதில், ஏதோ உள் நோக்கம் இருப்பதாக கருதுகிறேன்.


"ராஜாவின் குறட்டைச் சத்தத்தால், காட்டிற்கு எந்த பாதிப்பும் இல்லை. குறட்டையை ஒரு குற்றமாக நீதிமன்றம் கருதுவதாக இருந்தால், இந்தக் காட்டில் இருக்கும் எல்லா மிருகங்களின் குறட்டையையும், ஆய்வு செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என்று கூறியது கரடி.

வாதங்களை கேட்ட நீதிபதிகள், "இன்று இரவு நாங்கள் குறட்டையை ஆய்வு செய்ய இருக்கிறோம். அதன் பின், தீர்ப்பு கூறுவோம்..." என்று தெரிவித்து, நீதிமன்றத்தை விட்டு வெளியேறின.

சிங்கராஜாவுக்கு எதிரான வழக்குக்கும், தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை, என்பது போல ஒன்றுமறியாத அப்பாவியாக நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தது புலி. மற்ற மிருகங்களும் அதன் இருப்பிடத்தை நோக்கிச் சென்றன. நரியை ரகசியமாக சந்தித்து, கவலையோடு சில கேள்விகளை கேட்டது புலி.

(தொடரும்)

# மகாபாரதம்




கொல்லாமை நான்கு வகை எனச் சான்றோர் கூறுவர். ஒன்று தவறினாலும் அது கொல்லாமை ஆகாது.

உலகில் உள்ள அனைத்து தருமங்களும் கொல்லாமையில் அடங்கி விடுகின்றன. மனத்தாலும், சொல்லாலும், செயலாலும் ஒருவனை பாவம் பற்றுகிறது.

ஆகவே துன்பங்களை விட வேண்டும். பிற உயிர்க்குத் துன்பம் செய்யக்கூடாது. இத்தகைய துன்பங்களும் நாங்கு வகை ஆகும். நினைப்பதாலும் சொல்வதாலும் செயலாலும் இது குற்றமாகக் கருதப் படுகிறது.

புலால் உண்ணாதவன் இம் மூன்று குற்றங்கள் அற்றவன் ஆகிறான். மனம், சொல், ருசி காணும் நாக்கு, இம் மூன்றிலும் இந்தக் குற்றங்கள் நிற்கின்றன என்று வேதம் உணர்ந்தவர்கள் கூறுவர். அதனால் தவம் இருக்கும்ஞானிகள்புலால் உண்பதில்லை.

புலால் உணவில், தன் மகனது தசை போன்றது என்பது தெரிந்தும் புலாலைப் புசிக்கும் மனிதன் கீழானவனாகக் கருதப்படுகிறான். தாய், தந்தையர் சேர்க்கையால் மகன் தன்வசம் இல்லாமல் பிறப்பது போல உயிர்க்குத் துன்பம் செய்பவன் தன்இச்சை இல்லாமலேயே பாவப் பிறவி எடுப்பது உறுதி. எப்போது நாக்கு சுவையை உணர்கிறதோ அப்போது மனதில் ஆசை தோன்றுகிறது.


புலால் உண்ணும் இயல்புடையவர்கள் ஏழிசையை அனுபவிக்க இயலாது. பிறரது செல்வத்தைக் கெடுப்பவரும், புலாலை விரும்புபவரும் சுவர்க்கத்திற்குச் செல்ல முடியாது.

புலாலை விரும்பிப் பேசுவதுகூட அதனை உண்பது போன்ற குற்றமாகும். இரக்க குணம் மிக்க சான்றோர் தம் உடலையே பிறர்க்குக் கொடுத்துச் சுவர்க்கம்சென்றனர். இவ்வாறு கொல்லாமையின் மேன்மை கூறப்பட்டுள்ளது.

பின்னர் தருமர் "கொல்லாமை என்பது தர்மங்கள் அனைத்திலும்மேலானது என்றீர். ஆனால் சிரார்த்தங்களில் முன்னோர்க்குப் புலால் விருப்பத்தைத் தரும் என்று முன்னர் கூறியுள்ளீர். இது முரணாக உள்ளதே புலாலை விடுதல் என்னும் தருமத்தில் எங்களுக்கு ஐயம் உண்டாகிறது.


புலால் உண்பதால் ஏற்படும் குற்றம் யாது? புலால் உண்ணாமையால் ஏற்படும் நன்மை யாது? கொன்று உண்பவன், பிறர் கொடுத்ததை உண்பவன், விலைக்காகக் கொல்பவன், விலைக்கு வாங்கி உண்பவன் ஆகிய இவர்களுக்கு நேரும் குற்றங்கள் யாவை? இவற்றையெல்லாம்விளக்க வேண்டுகிறேன்" என்றார்.

பீஷ்மர் சொல்லலானார். "அழகான உடல் உறுப்புகளையும், நீண்ட ஆயுளையும், துணிச்சலையும், ஆற்றலையும், நினைவாற்றலையும் அடைய விரும்புபவர்கள் புலால் உண்பதைத் தவிர்க்க வேண்டும். (தொடரும்)



ஒரே தொலைபேசியைக் கொண்டு ZOOM வகுப்பில் படிக்கும் சகோ தரரின் நிலை?




அண்ணாத்தே படம் எப்படி இருக் கிறது வியாசரே?

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**ஆளும், பங்காளிக் கட்சிகளுக்கிடையிலான முரண்பாடு தொடர்பில்?**

“ நித்தம் போனால் முத்தம் சலிக்கும்” என்றொரு ஊர் பழமொழி உண்டு.

பலமான, மூன்றில் இரண்டைவிட அதிக பலம் கொண்ட இந்த அரசு தற்போது ஆட்டம் காணத் தொடங்கிவிட்டதை உணர முடிகிறது.

தெற்கில் எது நடந்தாலும் அது தமிழினத்திற்கு நன்மை பயப்பதாய் அமையாது.

அந்த வகையில் அவற்றைப் பார்த்து நாம் கலங்கத் தேவையில்லை.வேடிக்கை மட்டும் பார்க்கலாம்.

**சுதன் — வல்வெட்டித்துறை**

**வரதட்சணைக் கொடுமை தீருமா வியாசரே?**

வரதட்சணை என்பதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாதவர்களே அதிகம்.

இருவர் ஒன்றாக வாழத் தொடங்குகின்றனர்.

அவர்கள் இருவரும் சந்தோசமாய் வாழ்வதற்கு இரு வீட்டார்களாலும் கொடுக்கப்படுவது வரதட்சணை.

அது இப்போது ஒருவருக்கென்றாகி விட்டது.

அந்த ஒருவர் பெண்ணாகிவிட்டார்.

**தருஷ் — வதிரி**

**தமிழ் மக்களுக்கு ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா வியாசரே?**

என் அன்புமிகு தமிழ்ச் சனமே! இது பண்டிகைக் காலம் அல்ல. கொடிய கிருமியின் ஆதிக்கம் நிறைந்த காலம்.

இந்தக் காலத்தில் வரும் பண்டிகைகளை நாம் அனைவரும் பொறுப்புடன் கடைப்பிடிக்க வேண்டிய காலம் இது.

தீபாவளியை முன்னிட்டு நகரில் கூடிய மக்களைப் பார்க்கும் போது அடடா இப்படி பொறுப்பின்றிய இனமாக இருக்கின்றோமே என்ற எண்ணம் மேலோங்கியிருந்தது.

இதன் விளைவு எவ்வாறு அமையப் போகிறது என்பதை நினைக்க ஈரக்குலை நடுங்குகின்றது.

**திருவரதராசா — வவுனியா**

**ஒவ்வொரு உயிரினமும் இயங்கக் கூடியவாறு உடலுறுப்புகளை திட்டமிட்டு உருவாக்கியது யார்?**

இதுதான் இயற்கை- கடவுளின் படைப்பு.

சுட்டெரிக்கும் சூரியனில் கூட தரையிறங்கி ஆய்வு செய்யும் அளவில் விஞ்ஞான வளர்ச்சி இருக்கிறது.

ஆனால் உயிர் உருவாக்கத்திற்கு சரியான பதிலை இன்றுவரை விஞ்ஞானிகளால் கூற முடியவில்லை.

மெஞ்ஞானம்- விஞ்ஞானம் என்ற போட்டியில் விஞ்ஞானம் விஞ்சலாம். இறுதியில் மெஞ்ஞானமே உயர்ந்து நிற்கும். அவ்வளவே.

அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய கேள்விகளை
**021 567 1532**
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**சுதன் — குப்பிழான்**

**ஒரே நாடு ஒரே சட்டம் பிரிவினையை ஏற்படுத்துமா?**

ஒரேநாடு ஒரே சட்டம் என்ற சொற்பதத்தை வைத்து விட்டு அந்த குழுவில் ஒரு தமிழரைக் கூட நியமிக்காததன் நோக்கமே பிரிவினை வாதம் தானே.

தமிழினம் என்றாலே தீண்டத் தகாதவர்களாயும் பயங்கரவாதிகளாயும் பார்க்கும் பெரும்பான்மையால் பிரிவினைவாதத்தை விதைப்பதைவிட வேறு எதைச் செய்து விட முடியும்.

தமிழினம் இருக்கும் நிலையில் தாம் இருந்தால் என்ற மனத்தராசில் தம்மை இட்டுப் பார்க்காதவரை பெரும்பான்மை திருந்தாது.

**இதழினி — புலோலி**

**சொந்த உறவுகள் எம்மை வேண்டாம் என ஒதுக்க அயல் உறவுகள் அன்பாய் தோள் கொடுக்கிறார்களே?**

அன்பு-பாசம்- உறவு இதெல்லாம் இப்போது மலையேறிப் போய்விட்டது.

இப்போதைய உலகத்தில் பணம்,பணம், பணம் இதுதான் அனைத்தையும் தீர்மானிக்கிறது.

ஏழை விடும் நகைச்சுவைக்குச் சிரிப்பதை விட பணக்காரன் நகைச்சுவை என்ற பெயரில் ஏதோ சொல்ல அதற்குச் சிரிக்கும் மனிதரே இப்போதைய உலகில் வாழ்கின்றனர்.

சிரிப்புக் கூட பணத்தைப் பார்த்தே வருகிறது என்றால் என்னத்தைச் சொல்லிவிட.

**நந்து — யாழ்ப்பாணம்**

**என்னப்பா அத்தியாவசிய பொருட்களின் கட்டுப்பாட்டு விலையை நீக்கி விட்டார்களே?**

இது ஒன்றும் ஆச்சரியப்பட வேண்டிய விடயமல்ல.இனி பெரும் வர்த்தக முதலைகள் பொருட்களுக்கான விலையை நிர்ணயிப்பர்.

ஒரு கிலோ அரிசியின் விலை ஒரு பவுணைத் தாண்டும்.

பணத்தை அச்சடிக்கும் வேலை மட்டும் செய்யாமல் கொஞ்சம் பொருளாதாரத்திலும் அக்கறை செலுத்தினால் நாடு தவறும்.இல்லை எனின் நாடு கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போவது உறுதி.

**சிவன் — வடமராட்சி**

**அண்ணாத்தே படம் எப்படி இருக்கிறது வியாசரே?**

நீண்ட காலத்திற்குப் பிறகு ரஜினி கிராமப்புற நாயகனாக நடித்திருக்கின்றார்.

குடும்பங்கள் கொண்டாடும் வகையில் அண்ணன்-தங்கை பாசத்தை மையமாகக் கொண்டு படம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

ரஜினி எழுபதைத் தாண்டியவரா என்ற வியப்பு படத்தைப் பார்க்கும் போது தோன்றுகிறது.

அவ்வளவுக்கு உற்சாகமாக பட்டையக் கிழப்பி இருக்கிறார்.

தற்போதே படம் நூறு கோடி வசூலைத் தாண்டிவிட்டது.

**நிலா — சுழிபுரம்**

**ஒரே தொலைபேசியைக் கொண்டு ZOOM வகுப்பில் படிக்கும் சகோதரரின் நிலை?**

அண்மையில் ஒருவர் படபடப்பாக நின்று கொண்டிருந்தார்.மழை கொட்டிக் கொண்டிருந்தது.

அவரும் என்னுடன் வீதியோர கடை ஒன்றின் தாழ்வாரத்தில் நின்று கொண்டிருந்தார்.

ஏன் ஏதும் அவசரமா என்று கேட்டேன். மகனின் Zoom வகுப்பு காசு கட்ட வேண்டும். காசு கட்டவில்லை என்றால் வகுப்பில் பங்கு பற்ற முடியாது. 10 மணிக்கு முன் கட்டினால் தான் யூசர் நேம், பாஸ்வேட் தருவார்கள் என்று படபடத்துக்கொண்டிருந்தார்.எமது கல்வி முறையை நினைத்து வான மாதா கண்ணீர் வடித்துக் கொண்டே இருந்தாள்.

# அவள்...



சந்தனத்தில் சாறு பிழிந்து
பொன் வதனத்தை அலங்கரிப்பாள்
ஒற்றை நிலவுபோல்
எப்போதும் நெற்றியில்
குங்குமம் குதூகலிக்கும்

நாணுவாள் , கூனுவாள், குனிவாள்

மயில்போல் தூங்கும்
மழலையின் முகத்தில்
மலர்ந்து மறையும்
மாயப்புன்னகை போல்
புதிராய் சிரிப்பாள்
அதுவும் அரிதாய் சிரிப்பாள்
பூவை நிகர்ப்பாள்

அபூர்வ பறவையாய்
அன்றாடம் தோன்றுவாள்
ஆனந்தக்கூட்டிப் பின்
அந்திக்குள் மறைந்திடுவாள்

பிரகாசன், வள்ளுவர்புரம்

# எத்தனை போராட்டங்கள்

யுத்தம் நடந்த பொழுதுகள் கூட
நித்தம் எழவில்லை இத்தனை போல

வீதியில் நிரம்பிய போராட்டங்கள்
விதிகளும் அறியா கலவரம் ஆக

மக்களின் உறுப்பினர் கூடும் சபையில்
வாசக அட்டைகள் கரங்களில் தெரிய

தரைகளில் செய்தவை போதும் என்று
கடலில் போயினர் கொடிகள் கொண்டு

விளைநிலம் சூழ விதைப்பவர் கூடி
வாசகம் உரைத்தனர் போராட்டம் என்று

ஏட்டினைக் கற்பிக்கும் கரங்கள் அன்று
வீதியில் இறங்கி நகைச்சுவை புரிய

இந்நிலை கண்டு நானும் வருந்த
காரணம் அறியேன் இந்நிலை நிகழ

ந.விதுஷன்
யா/ கற்கோவளம் மெ.மி.த.க.
பாடசாலை

# புதுமலர்

இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதி
இதிலேது உனக்கு இயல்பான பாதை


இரவும் பகலும் உலகில் இல்லையென்றாலிங்கே
உயிர்கள் வாழ்வதேது உலகம் உருள்வதேது

இல்லாத ஒன்றை நினைத்து ஏங்கும் நிலையை மாற்று
கையில் இருப்பதை வைத்து மனதை திருப்பதிப்படுத்து

புதியவர் செயலால் மலர்ந்த புண்ணிய பூமியிலே
பூத்துக்குலுங்கும் புதுமலரோ
புன்னகை புரியும் சிறுமலர் நீயோ

க.சிவகுமார், சுழிபுரம்

# தீர்வு மௌனமே



உணர்வுகள் ஊனமுற்று கிடக்கிறதே!
உறவுகளோ அறுபட்டு துடிக்கிறதே!
மனம் தவில் வலிகள் ஊறித் திளைக்கிறதே!
இனம்புரியா சோகம் எனைச் சூழ்கிறதே!

நெருக்கங்கள் எல்லாம் நொறுங்கியதே
உருக்கமான உறவுகள் உருகியதே!
இருக்கும் வாழ்க்கைக் காலமும் குறைகிறதே
பெருக்கெடுத்து சோகம் தான் வருகிறதே!

விதியை நோவதோ! மதியை நோவதோ!
சதிசெய்தோரை அகம்தனில் நினைத்து நோவதோ!
புதிராய் இருக்கும் வாழ்க்கைக்கு- என்றும்
இறுதித் தீர்வு மௌனமே!

மூளாயூர் க.அபிஷேக்
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை

# மௌனத்தின் தேடல்- 535



## கிராமிய விளையாட்டு

ஏய் மனிதா! இன்று நாம்
நம் உலகில் எத்தனையோ
விளையாட்டுக்களைப் பார்த்திருப்போம்
ஒன்றாய்க்கூடி விளையாடி மகிழ்ந்திருப்போம்
ஆனால் நீ விளையாடும்
இந்தப் பழைமையான
கிராமிய விளையாட்டுக்கு உலகில்
எதுவுமே நிகரில்லை

சுப்பிரமணியம் ஜெயரூபன்
பருத்தித்துறை.

## நன்றிக்கடனா...

மாடு செத்தாலும் சிவன்
மனிதர்க்கு உணவு தோலாகும்
வாழும் போது பாலாகும்
கோமயம் கோசலம் பசளை
பன்றி இறந்தால் மட்டும்
பயன் மானுடமே இனும் ஏன்
பசுவதை பாலைத் தாயாகித்
தருவதற்கு நன்றிக் கடனா

சாமிபுத்திரன், தாவடி

## சுண்டி இழுக்கும்

மாட்டுப் பிறப்பு மகத்தானது
மன்னுயிர் உணவுக்கு உழவு
வீட்டுக்குப் பால் சுரங்கம்
குழந்தை சிலவுக்குத் தாயாகும்
வண்டி இழுக்கும் வயல் வேலை
மாடாய் உழைக்கும் சுண்டி
இழுக்கும் நாணயக் கயிறுக்கு
சுறுசுறுப்பாகி இயங்கும்

கார்வண்ணன்
காவலூர்

## சவாரித்திடல்

சித்திரைப் புத்தாண்டு
தமிழர் திருநாளாம்
வண்டியிலே மாடு
இரண்டு பூட்டி
அண்ணன், தம்பி இருவருமே
சவாரித் திடல் தனிலே
பண்பாட்டு விளையாட்டு
போட்டியிலே
பந்தயம் கட்டி வெற்றி
வாகை சூடிடவே
மாட்டு வண்டிகள் நடுவினிலே
நம்பிக்கை எனும்
கோல் கொண்டு
மாடுகளை விரட்டுகின்ற
தமிழர்களின்
வீர விளையாட்டு

கும்பவாழியன்
உடுப்பிட்டி

# மௌனத்தின் தேடல்- 536



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## வண்டில் சவாரி

மாட்டு வண்டில் சவாரி மனதை மகிழ்வூட்டும் நாம்
காட்டும் பொழுதுபோக்கு வெற்றிபெற்றால் தங்கம்
அதற்கல்ல அடித்தவர்க்கு ஏமாற்றம் பெறும் வெறும்
வைக்கோல் தவிடு சரி செய்யும்
இரக்கம் காட்டுங்கள் மானுடமே

வைகதன், கொக்குவில்

## காளைச்சவாரி


இரண்டு மரச்சில்லு வண்டில் இருகாளை
மாடுதனைப் பூட்டி ஒய்யாரமாய் உட்கார்ந்து
வண்டிச்சவாரி போகும் மன்னவனே
பாரம்பரிய விளையாட்டுத்தனை
பறைசாற்றிடவோ இம்மண்ணுலகில் நீ வந்துதித்தாய்

பாலமதுஜா, யா/ மெதடிஸ்த பெண்கள்
உயர்காப் பாடசாலை

# நாடற்றவர்களின் கடவுச்சீட்டு

**அம்மா, உன்னுடைய கணவனை இலங்கையில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டவர் என்று அரசாங்கம் இவ்வளவு காலமும் சந்தேக நபர் பட்டியலில் வைத்திருந்தது. நாடு கடத்துமாறு கேட்டுக் கொண்டதன் பிறகு நடவடிக்கை எடுத்திருக்கிறது. உனக்கு திருப்தியான பதிலைத் தர வேண்டும் என்பதற்காக, பொய் சொல்ல விரும்பவில்லை மகளே.**

வலி சொல்லும் தொடர்... 06



ஜூனியர் விகடன்

இலங்கை, இந்தோனேசிய அன்பில் உருவான, நீதனின் முதல் குழந்தை பிறந்தபோது அனீஸாவின் மகிழ்ச்சிக்கு அளவிருக்கவில்லை. அது செவ்வரத்தம் பூப்போல சிரித்தது.

தனக்கென்ற இரண்டாவது சொந்தம் இந்தப் பூமியில் தோன்றிய ஆனந்தம் அனீஸாவின் கண்களில் பொங்கி வழிந்தது. தானும் புதிதாகப் பிறந்தவளாகத் திளைத்தாள்.

திருமணத்தைப்போல் அல்லாமல், குடும்பத்தின் எல்லா நிகழ்வுகளையும் நீதன் விமர்சையாகக் கொண்டாட ஆரம்பித்தான். சாப்பாட்டுக்கடைக்கு முன்னால் வாடகைக்கு எடுத்த மண்டபத்தில் நீதன் வீட்டுக் கொண்டாட்டம், மாதம் ஒரு தடவை நடைபெறும் என்ற அளவுக்குக் குடும்பமே குதூகலித்திருந்தது. பெருகிய வருமானத்தில் போகூரில் நீதனுக்குச் சொந்தமாக மூன்று சாப்பாட்டுக்கடைகள் சக்கைபோடு போட்டன.

செய்தியைக் கேட்ட அனீஸா, மூர்ச்சையுற்று வாசலிலிருந்த அங்கரக்கன் புல்லான் பூச்சாடிக்குள் குப்புற விழுந்தாள். கடையில் வேலை செய்பவர்கள், குடும்பம்போல உதவியாக நின்று அவளை மருத்துவமனையில் சேர்த்தார்கள். கறுப்பு உடையும் முகமூடியும் அணிந்திருந்த கும்பலொன்று ஜாவாவிலிருந்து வந்து நீதனைக் கடத்தியிருப்பதாக கண்டுபிடித்த பொலிஸ், "இது பணத்துக்காக இடம்பெற்ற சம்பவம் போலத் தெரியவில்லை" என்று ஆரூடம் சொன்னது.

மயக்கம் தெளிந்த அனீஸா, தனக்குத் தெரிந்த பொலிஸ் உயர் மட்டங்கள் எல்லோருக்கும் அறிவித்தாள். தன் கணவனை மீட்பதற்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்று அவர்களின் காதுகளுக்குள் காசைச் செருகினாள்.

நீதன் இல்லாமல் கடைகளைத் திறப்பது அனீஸாவுக்கு சிரமமாக இருந்தது. போகூர் மத்திய பேருந்து நிலைய கடையை மாத்திரம், பணியாளர்கள் மதிய உணவுக்குத் திறந்து மூடினார்கள்.

நீதன் காணாமல்போய் ஆறாவது நாள், ஜாவாவிலிருந்து அனீஸாவைப் பார்ப்பதற்கு வந்த ஒருவர், தொலைபேசியில் தன்னை சட்டத்தரணியென்று அறிமுகம் செய்தார். தான் சொல்லுமிடத்துக்கு வரச் சொன்னார்.

அவளுக்குள் திரண்டிருந்த மூர்க்கம் உந்தித்தள்ளியது. யாருக்கும் சொல்லாமல் மூத்தவனையும் அழைத்துக்கொண்டு சொன்ன இடத்துக்கு வாகனத்தில் போய் இறங்கினாள். இறுக்கமாக வெள்ளை மேலங்கி அணிந்த அரச உத்தியோக நெடி வீசும் அவர் ஐம்பதுகளிலேயே நரைந்திருந்தார்.

மூங்கில் கிடுகுகளினால் வேய்ந்த அந்த ஆற்றங்கரை உணவகத்தில், சட்டத்தரணி கேட்ட முதல் உரையாடலே அனீஸாவுக்கு முகத்தில் அறைந்ததுபோலிருந்தது. "அவர் என்னுடைய கணவர். அவரது பின்னணி பற்றி நீங்கள் கவலைப்பட வேண்டாம். அவர் இப்போது எங்கே இருக்கிறார்... யார் கடத்தினார்கள்... நீங்கள் ஏன் இப்போது என்னை இங்கே அழைத்தீர்கள்...எங்களைச் சுற்றி என்ன நடக்கு... நீங்கள் யார்?"

அழுகை வெடித்திருக்காவிட்டால், அனீஸா தனது மீதிக் கேள்விகளையும் கொட்டியிருப்பாள். கண்கள் இருட்டின. தஞ்சக்கேட்டில் தலை சுற்றியது. மேசையில் முகத்தைச் சரித்து அழத் தொடங்க, அருகிலிருந்த மகன் "அம்மா" என்றான்.

இரண்டு குடுவைகள் நிறைய இளநீர் கொடுத்துவிட்டுப்போனான் பரிசாரகன். அனீஸாவின் அழுகை திருப்தியான ஓய்வுக்கு வரும் வரைக்கும் சட்டத்தரணி பொறுமை காத்தார். பிறகு அடிக்குரலில் பேசத் தொடங்கினார்.

"அம்மா, உன்னுடைய கணவனை இலங்கையில் தற்கொலை குண்டுத் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டவர் என்று அரசாங்கம் இவ்வளவு காலமும் சந்தேக நபர் பட்டியலில் வைத்திருந்தது. நாடு கடத்துமாறு கேட்டுக்கொண்டதன் பிறகு நடவடிக்கை எடுத்திருக்கிறது.

உனக்கு திருப்தியான பதிலைத் தர வேண்டும் என்பதற்காக, பொய் சொல்ல விரும்பவில்லை மகளே. அனீஸாவின் முகத்தில் அசைவிருக்கவில்லை.

"நான் சொல்வது பொய் என்று நினைக்காதே. நான் ஜாவாவில் மொழிபெயர்ப்பாளனாகவும், அகதிகளின் சட்ட விவகாரங்களைக் கையாளுபவனாகவும் வேலைசெய்கிறேன். கடத்திவந்த நீதனிடம் வாக்கு மூலம் வாங்குவதற்கு என்னை அழைத்துப் போனார்கள். ஆனால், அவன் சரளமாக இந்தோனேசிய மொழி பேசத் தொடங்கிய பிறகு, எனக்கு அங்கு வேலையிருக்கவில்லை."

நீதனைப் பற்றி அனீஸாவுக்கு இந்த உலகில் யாரும் புதிதாக எதையும் சொல்லிவிடப் போவதில்லை. நீதனின் வாழ்க்கையை அனீஸா நேரில் கண்டு அவனை விரும்பியதைவிட, அவன் கடந்து வந்த வாழ்வுதான் அவன்மீது அதிக நேசத்தை அவளுக்குள் ஊறச் செய்தது.

காதலிக்கும்போது ஒருநாள் குனுங்பட்டு குன்றின் மீது ஏறி நின்று, பரந்திருந்த காடுகளை ரசித்திருந்த நீதனைத் தன்பக்கம் இதழ்களை கவ்வினாள் அனீஸா.

உடனே, அவளது இடுப்பை வளைத்துப் பிடித்து இறுக்கிக் கொண் டான் நீதன். "இது துப்பாக்கி பிடித்த கை. தெரியும்தானே" என்று காதலோடு காதைக் கடித்தாள் அனீஸா. "ஏன், இது மாத்திரம் என்னவாம்..." என்றபடி தன் விரல்களால் அவள் உதடுகளை வருடினான் நீதன்.

அனீஸாவின் கண்கள் நிரம்பி வழிந்தன. கணவனைக் கண்டு வந்த ஓர் உருவம் தன் முன்னாலிருந்து பேசுகிறது என்பதை உணரத் தொடங்கிய அவளுக்கு, குளறி அழ வேண்டும்போலிருந்தது. வயிற்றைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு கேவினாள். அருகிலிருந்த மகனை இறுக அணைத்தாள். அநாதரவாக உணர்ந்தாள்.


"இந்தோனேசிய பாதுகாப்பு நிலைமைகள் உனக்குத் தெரியாதது இல்லை. நீ பொலிஸில் இருந்திருக்கிறாய். நான் உனக்கு எதுவும் புதிதாகப் புரியவைக்கத்தேவை யில்லை."

அவர் சொன்ன கடைசி வரிகளில் பல அர்த்தங்கள் உள் ளன என்பதை அனீஸா நன்கு அறி வாள். நீதன் கடத்தப்பட்டதற்கு யார் பொழியும் காரணத்தையும் ஏற்றுக்கொள்ள அவள் தயாராகயிருக்கவில்லை. வந்தவரிடம் நன்றி சொல்லி விட்டு, மகனைத் தூக்கினாள். வேகமாக காருக்கு நடந்தாள். சூரியனே கழன்று விழுந்ததுபோல போகூரை வெயில் எரித்துக்கொண்டிருந்தது.

(அடுத்தவாரம் தொடரும்)

# கடல் புறா

## வீட்டுப் புறா! காட்டுப் புறா! கடல்புறா!




இதைச் சொன்ன அவன் சிரம் தாழ்த்தி ஆண்டவனைச் சில விநாடிகள் நினைத்தான். பிறகு அனைவரையும் வண்டியிலேறி அவரவர் இடங்களை அடைய உத்தர விட்டான். அவரவர் அமர்ந்ததும் அவனும் அமர, பெரும் காளைகள் பூட்டப்பட்ட அந்த வண்டியும் திடுதிடுவென சக்கரங்கள் சப்திக்க, பாலூரின் வீதிகளில் புரண்டோடியது.

அப்படிப் புரண்டோடி ஆறாவது நாழிகையில் கிழக்குக் கோட்டை வாசலை வண்டி எட்டியதும் தூர இருந்த நிலையை நோக்கி அமீரின் இதயம் படபடவென அடித்துக் கொண்டது. பெரும் பயம் புத்தியைச் சூழ்ந்து கொண்டது.

### சோதனை

கலிங்கத்தின் பெரும் சாதிக் காளைகள் இரண்டு பூட்டப்பட்ட தனது வண்டியை அரை நடையாகவும் அரை ஓட்டமாகவும், மிகுந்த எச்சரிக்கையுடன் விட்டுக் கொண்டு வந்த அமீர், நான்காம் பிறைச்சந்திரன் உதயமாவதற்கு முந்தைய ஆறாவது நாழிகையின் துவக்கத்தில் கிழக்குக் கோட்டை வாசலின் ஆரம்பப் பகுதியை அணுகியதுமே கண்களை உயர்த்திச் சற்று தூரத்தே எதிரேயிருந்த நிலைமையை நோக்கி அச்சத்தால் இதயம் படபடக்கச் சில விநாடிகள் திணறியே போனார்.

சிறு வணிகர் வீதியிலிருந்த இல்லத்தை விட்டுப் புறப்படும் முன்பே வண்டியின் ஏற்பாட்டைப் பலத்த முன் யோசனையுடன் செய்து முடித்திருந்த அந்த அரபு வர்த்தகனின் சிந்தனையின் ஒரு பகுதி அச்சத்துக்கு ஏதும் இடமில்லையென வற்புறுத்தினாலும், இன்னொரு பகுதி கண்ணுக்கெதிரேயிருந்த ஆபத்தை விளக்கி அச்சத்தின் அவசியத்தை வலியுறுத்தலாயிற்று.

வாணிபப் பொதிகளை ஏற்றிச் செல்வதற்காகவே நிர்மாணிக்கப்பட்டிருந்த அந்தப் பார வண்டியில் அசையக்கூட இடமில்லாத வண்ணம் பன்னிரண்டு நீர்க்குடங்களைத் திணித்திருந்த அமீர் அவற்றின் ஆறடி உயரத்தளவுக்குப் பக்கக் கழிகளைச் செருகியதன்றி, அவற்றுக்குப் பாதுகாப்பளிக்கும் பாவனையில் ஏராளமாக வைக்கோலையும் வாழை இலைச் சருகுகளையும் திணித்து அவை கழுத்தளவுவரை மறையும் படி செய்திருந்தாலும், அவற்றில் ஆறு குடங்களில் காஞ்சனாதேவி, குணவர்மன் இவர்களைத் தவிர கூலவாணிகன், சுங்க அதிகாரி, காஞ்சனாதேவியின் பணிப்பெண்கள் இருவர் ஆகியோரை ஒரு குடம் விட்டு இன்னொரு குடமாகப் பதுங்க வைத்திருந்தாலும் அவர்களைப் பதுங்க வைத்த குடங்களின் கழுத்துக்குக் கீழே இரண்டொரு பெரும் துவாரங்களைச் செய்து மூச்சு விடவும் ஏற்பாடு செய்திருந்தாலும், அச்சத்துக்கு எந்தவிதக் காரணமும் இல்லை. நீர் நிரம்பியிருந்த குடங்களைத் தவிர்த்து மனிதர்கள் பதுங்கியிருந்த குடங்களில் மூச்சுக் காற்றுக்காகத் துளைத்திருந்த துவாரங்கள் வைக்கோலின் மறைவிலும் வாழைச் சருகுகளின் மறைவிலுமிருந்தபடியால் அவை இருப்பது யார் கண்ணுக்கும் புலப்படாமல் செய்திருந்தான் அமீர்.

கிழக்குக் கோட்டை வாசலைத் தாண்டிக் காஞ்சனாதேவி உண்டைவில் மூலம் எரியம்பு வீச நேர்ந்ததால் அவள் இருந்த நீர்க்குடத்தின் மூடியை விலக்கும் நோக்கத்துடன் அவள் பதுங்கியிருந்த குடத்தை மட்டும் முன்னணியில் தன் சாட்டைக் கைக்குப் பக்கத்தில் வைத்திருந்தான் அவன். இரவில் செல்லும் இத்தகைய வண்டிகளில் வெளிச்சத்துக்கு இருபுறமும் பந்தங்கள் செருகுவது வழக்கமானாலும், வண்டியில் அதிக வெளிச்சமிருக்கக் கூடாது என்ற எண்ணத்தால் ஒரே ஒரு பந்தத்தை மட்டும் சாட்டை பிடித்திருந்த தனது வலது கைக்கு அருகேயிருந்த பெரும் கழியில் கட்டியிருந்தான்.

அப்படிப் பிணைந்திருந்த அந்தப் பந்தத்தில் துணியும் அவன் அதிகம் சுற்றாமல் மெல்லிய பந்தமாகவே அதை எரிய விட்டிருந்ததால் அது மிகக் குறைவான ஒளியையே வண்டியில் வீசியிருந்ததன் விளைவாக ஒரு குடத்துக்கும் இன்னொரு குடத்துக்கும் எந்தவித வித்தியாசமும் இல்லாதிருந்ததோடு அந்தப் பந்தம் வண்டியின் முகப்பில் அமீரின் சாட்டைக் கரத்துக்குப் பக்கத்திலிருந்த காரணத்தால் காஞ்சனாதேவி சரேலென எரியம்பைக் கொளுத்தும் வண்ணம் அவளிருந்த குடத்துக்கு வெகு அருகாமையிலும் அமைந்து கிடந்தது.

இது தவிர குடங்களைக் கழுத்து வரையில் மறைத்த பெரும் வாழைச் சருகுகளைச் சின்னஞ் சிறு விசிறிகள் போல் பிரித்து ஆங்காங்கு வைத்திருந்ததால் அவை அந்தந்த இடங்களில் பந்தத்தின் வெளிச்சத்தைத் தடை செய்து குடங்களின் மீது பட்டை பட்டையாக இருட்டைப் பாய்ச்சியிருந்தது. இப்படிப் பல வழியிலும் மறைக்கப்பட்ட குடங்களின் மூடப்பட்ட வாய்கள் கூடச் சட்டென்று பார்வைக்குப் புலனாகாமலே இருந்தன.

இத்தனை முன்னேற்பாடுகளைச் செய்த அமீர் இவற்றையும் மீறிச் சோதனை நடந்தால் தான் நடத்த வேண்டிய வேலையை எண்ணித்தன் வயிற்றுப் பகுதியிலிருந்த கச்சையில் வரிசையாகப் பல குறுவாள்களையும் செருகிக் கொண்டிருந்தான்.

இந்த ஏற்பாடுகளைச் செய்து முடிக்கும் முன்பாகவே அநபாயனுக்கும் இளைய பல்லவனுக்கும் தனது அடிமைகளின் வேடங்களை அணிவித்த அமீர் அவர்கள் இருவரையும் முக்காடுகளை நன்றாக இழுத்து முகங்களை மறைத்துக் கொள்ளுமாறு வாள்கள் வெளியில் தெரியாத வண்ணம் அரபு நாட்டுப் பெரு அங்கிகளின் மடிப்புகளில் பதுக்கிப் பிடித்துக் கொள்ளுமாறும் எச்சரிக்கை செய்துவிட்டு, அவர்களிருவரையும் வண்டியின் பின்புறத்தில் உட்கார வைத்த பின்பே வண்டியை ஓட்ட முற்பட்டான்.

இந்த ஏற்பாடுகள் பரிபூரண திருப்தியையே ஆரம்பத்தில் அளித்திருந்தன அமீருக்கு. தன் வாணிபத்தை முதல் நாளே மற்றொரு வாணிகனுக்கு விற்று அவனிடமிருந்த விலைப் பொருளைப் பொற்காசுகளாகப் பெற்றுக் கொண்ட அமீர், அந்தப் பொற்காசுகளைத் தான் வழக்கமாக வைக்கும் பெட்டியில் வைத்துக் கூடக் கொண்டு வரவில்லை. நீர்க் குடங்களின் வண்டியில் பணப் பெட்டி தென்பட்டால் கேள்விக்கு இடமாகுமென்று கருதிய அமீர் பொற்காசுகளை ஐந்தாறு துணிப் பைகளில் கட்டி நீர்க்குடங்களுக்கு இடையே இருந்த இடங்களில் வைத்து மேலே வைக்கோலைத் தூவி மறைத்திருந்தான். இப்படி ஒவ்வொரு காரியத்தையும் அணு அணுவாகக் கவனித்து ஆபத்தை எத்தனை தூரம் தவிர்க்க முடியுமோ அத்தனை தூரம் தவிர்த்து சந்தேகத்தை எவ்வளவு தூரம் விலக்க முடியுமோ அவ்வளவு தூரம் விலக்கியிருந்தான் அந்த அரபு நாட்டுச் சிறுவணிகன்.

அது மட்டுமன்றிச் சீனக் கப்பலுக்குத் தன் வீட்டிலிருந்தே நீர்க் குடங்கள் செல்வதை வலியுறுத்தும் பொருட்டுப் பகல் முதலே சீனக்கப்பல்களிரண்டிலிருந்தும் பல நீர்க்குடங்களை வரவழைத்துத் தனது வண்டிகள் இரண்டொன்றிலும் நீர் நிரப்பிய குடங்களை அந்தக் கப்பல்களுக்கு இரண்டு மூன்று முறை அனுப்பியும் இருந்தான்.

அப்படி அனுப்பிய ஒவ்வொரு வண்டியையும் கோதாவரிக்கரைக் குடிசைக்கு அனுப்பி சங்கமக் கலங்கலற்றிருந்த தெள்ளிய கோதாவரி நீரை அங்கிருந்தே நிரப்பிப்பிறகு வண்டிகளைத் தன் வீட்டுக்குக் கொண்டு வந்து வீட்டிலிருந்தே வண்டிகளை கடற்கரைக்கு அனுப்பி வைத்தான். அப்படி அனுப்பிய ஒவ்வொரு வண்டியிலும் வண்டி ஓட்டுபவனைத் தவிர பின்புறத்தில் இரு அடிமைகளையும் உட்கார வைத்து அனுப்பினான். கடைசியாக வரும் தனது வண்டியை யாரும் சந்திக்கக் கூடாதென்பதற்காக முன்கூட்டியே இத்தகைய எச்சரிக்கையுடன் ஏற்பாடுகளைச் செய்த அமீர் தனது வண்டிகள் பலவற்றின் சோதனை ஏற்கனவே நடந்து விட்டதையும் உணர்ந்திருந்தானாகையால் எப்படியும் இந்த வண்டிக்கு அதிகச் சோதனையிக்காதென்ற துணிவுடனேயே வீட்டை விட்டுக் கிளம்பினான். (தொடரும்)

# அண்ணாத்த

## திரைவிமர்சனம்



யாருக்கும் அஞ்சாமல் அநியாயத்தை தட்டிக்கேட்கும் ஊராட்சி மன்றத் தலைவர் ரஜினிகாந்த். மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்குடன் இருக்கும் இவர், தங்கை கீர்த்தி சுரேஷ் மீது அளவற்ற பாசம் வைத்திருக்கிறார். வெளியூரில் படிக்கும் தங்கை கீர்த்தி சுரேஷ் விடுமுறையில் ஊருக்கு வரும்போது திருவிழா போல் கொண்டாடுகிறார். இதே போல் கீர்த்தி சுரேஷும் அண் ணன் மீது பாசமழை பொழிகி றார்.

உயிருக்கு உயிராக இருக்கும் தங்கைக்கு திருமணம் செய்ய முடிவு செய்து மாப்பிள்ளை தேடு கிறார். ஒரு வழியாக மாப்பிள் ளையை கண்டுபிடித்து திருமணம் செய்து வைக்கும் நிலையில் பிரச் சினை ஏற்படுகிறது.

இறுதியில் ரஜினிக்கு வந்த பிரச்சினை என்ன? அதை எப்படி சமாளித்தார்? கீர்த்தி சுரேஷுக்கு திருமணம் நடந்ததா? என்பதே படத் தின் மீதிக்கதை.

படத்தில் காளையன் கதாபாத்திரத்தில் நடித்து இருக்கிறார் ரஜினிகாந்த். தனக்கே உரிய பாணியில் காமெடி, ஆக்ஷன், சென்டிமென்ட் காட்சிகளில் அசத்தி இருக்கிறார். ஊர் மக்களுக்கு போராடுவது, தங்கை மீது பாசம் காட்டுவது, எதிரிகளை துவம்சம் செய்வது, நயன்தாராவுடன் ரொமான்ஸ் என்று திரையில் ஜொலிக்கிறார்.

தங்கையாக வரும் கீர்த்தி சுரேஷ் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். அண்ணன் மீது பாசம், காமெடி என நடிப்பில் ஸ்கோர் செய்து இருக்கிறார்.

வழக்கறிஞராக வரும் நயன்தாரா, அழகாக வந்து ரசிகர்களை கவர்ந்து இருக்கிறார். ரஜினியுடன் நடிக்கும் காட்சிகளில் ரசிக்க வைத்து இருக்கிறார்.

குஷ்பு மற்றும் மீனா ஆகியோர் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து இருக்கிறார்கள். வில்லனாக வரும் ஜெகபதி பாபு கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்து இருக்கிறார்.

அண்ணன், தங்கை பாசத்தை மையமாக வைத்து பல படங்கள் வந்திருந்தாலும், ரஜினிக்கேற்ற கதைக்களத்துடன் உருவாக்கியிருக்கிறார் இயக்குநர் சிவா. முதல் பாதியை ரசிகர்களுக்கு ஏற்றவாறு கமர்ஷியலாக கொடுத்து இருக்கிறார்.

ஆனால், பெரிதாக எடுபடவில்லை. இடைவேளைக்கு 10 நிமிடத்திற்கு முன்பாக கதைக்குள் அழைத்துச் செல்லும் இயக்குநர், பிற்பாதியில் ரசிகர்களை கட்டிப் போட முயற்சி செய்திருக்கிறார். தேவையற்ற காட்சிகள் படத்திற்கு பலவீனமாக அமைந்திருக்கிறது.

இமான் இசையில் பாடல்கள் அனைத்தும் சுப்பர் ஹிட்டாக அமைந்துள்ளது. வெற்றி பழனிசாமியின் ஒளிப்பதிவோடு திரையில் பார்க்கும் போது கலர்புல்லாக இருக்கிறது.

## அழகில் அம்மாவையே உரித்து வைத்திருக்கும் மகள்



நடிகை சினேகா தன்னுடைய குடும்பத்துடன் தீபாவளியை கொண்டாடினார்.

இதன்போது எடுத்துக் கொண்ட புகைப்படத்தினை இணையத்தில் பதிவிட்டு ரசிகர்களுக்கு வாழ்த்துக்களை கூறியிருந்தார்.

அதில் கணவர், மகன், மகள் என்று அனைவரும் கொள்ளை அழகில் ஜொலித்தனர்.

சினேகாவின் மகளைப் பார்த்த ரசிகர்கள் அம்மாவையே அழகில் உரிச்சி வைத்திருப்பாதாகக் கூறி புகைப்படத்தினை வைரலாக்கி வருகின்றனர்.

## மீண்டும் ஜோர்ஜியா செல்லும் விஜய்




நெல்சன் இயக்கத்தில் உருவாகி வரும் பீஸ்ட் படத்தில் நடித்து வரும் விஜய், மீண்டும் ஜோர்ஜியா செல்ல இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

விஜய் நடிப்பில் தற்போது உருவாகி வரும் படம் 'பீஸ்ட்'. நெல்சன் இயக்கி வரும் இப்படத்தில் பூஜா ஹெக்டே, செல்வராகவன், யோகிபாபு உள்ளிட்ட பலர் நடித்து வருகிறார்கள். இதன் முதல்கட்ட படப்பிடிப்பு கடந்த ஏப்ரல் மாதம் ஜோர்ஜியாவில் தொடங்கியது. ஆனால் அங்கு படமாக்கி வந்தபோது கொரோனா தொற்று அதிகமாக பரவத் தொடங்கியதால் திட்டமிட்டபடி அனைத்து காட்சிகளையும் படமாக்காமலேயே படக்குழு இந்தியா திரும்பியது.

அதையடுத்து சென்னை, டில்லி என்று படப்பிடிப்பு நடைபெற்று முடிந்துள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு தற்போது 75 சதவிகிதத்தை கடந்து விட்டது. தற்போது இறுதிக்கட்ட படப்பிடிப்பிற்காக மீண்டும் பீஸ்ட் படக்குழு ஜோர்ஜியா செல்லவிருப்பதாக ஒரு தகவல் வெளியாகியுள்ளது. அங்கு சண்டைக் காட்சி உள்ளிட்ட சில முக்கியத்துவமான காட்சிகளை படமாக்க இருப்பதாக கூறப்படுகிறது.

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : புதுக்கவிதை
இயற்றியவர் : வைரமுத்து
இசை : இளையராஜா
பாடியவர் : மலேசியா வாசுதேவன்



வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே
வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே
வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே
தெருவெங்கும் ஒளி விழா
தீபங்களின் திருவிழா
என்னோடு ஆனந்தம் பாட

வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே

ஆகாயமே எந்தன் கையில்
ஊஞ்சல் ஆடுதோ
பூ மேகமே எந்தன் கன்னம்
தொட்டு போகுதோ
சோகம் போகும் உன் கண்கள் போதும்
சின்ன பாதம் நடந்தால்
வலியும் தீர்ந்தது வழியும் தெரிந்தது ஓ

வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே
தெருவெங்கும் ஒளி விழா
தீபங்களின் திரு விழா
என்னோடு ஆனந்தம் பாட
வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே

என் வானிலே ஒரு தேவ
மின்னல் வந்தது
என் நெஞ்சினை அது கிள்ளி
விட்டுச் சென்றது
பாவை பூவை காலங்கள் காக்கும்
அந்த காதல் ரணங்களை
மறைத்து மூடுவேன்
சிரித்து வாழ்த்துவேன் ஓ

வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே
தெருவெங்கும் ஒளி விழா
தீபங்களின் திருவிழா
என்னோடு ஆனந்தம் பாட

வா வா வசந்தமே
சுகம் தரும் சுகந்தமே

# மாய கதிரவன்

அன்றும் வழமை போல அலைகளின் வருடலில் என் காலை வைத்து சுகம் கண்டு கொண்டு இருந்தேன். நான் எவ்வளவு பின் நோக்கி நகர்ந்தாலும் என்னைத் தேடி வரும் அந்த அலைகளைப் பார்க்கப் பார்க்க மனதில் ஒரு இனம்புரியா அமைதி.

அந்த அலைகளின் ஆரவாரம் என்னைச் சற்றுத் தொலைவில் கொண்டு போய் விட்டதாய் உணர்ந்தேன். சாயங்கால வானம் தன் வசம் உள்ள முகில்களை வைத்து கதிரவனின் ஓய்வுக்காக அணிவகுத்துக் கொண்டிருந்தது...மாலைக் கதிரவனின் மாய ஒளி என் மனதை மாயைக்குள் தள்ளின. வருடும் அலைகளை காணும் போது என்னவளின் தழுவலை உணர்ந்தேன். என் காதை கொய்யும் இளம் மாலைத்தென்றலின் வருடலில் என்னவளின் மூச்சுக் காற்றை உணர்ந்தேன். உணர்தல் தானே வாழ்க்கையின் இரகசியம் என தத்துவம் பேச தோனிற்று. இந்த நொடிகள் என்னும் நீளாதா என்று எதிர்பார்த்துக் கொண்டு இருந்த வேளை இந்த ஆரவாரங்களைத் தாண்டி என் அலைபேசி ஒலித்தது. எடுத்து பேசியதில் மறுபக்கம் என்னுடைய சட்டத்தரணி... நீங்கள் கேட்ட divorce பத்திரம் ready ஆகிவிட்டது.


உங்கள் மனைவி கையெழுத்துப் போட்டு விட்டார். நீங்கள் எப்போது வரப் போகிறீர்கள் என்று கேட்டார். திடீரென என் காலை நோக்கி வந்த அலைகள் என்னை விட்டு விலகிப் போவதை உணர்ந்தேன்.

மாலைக் கதிரவன் தன் ஒளியை கடல் எனும் திரைச் சீலையால் மறைத்துக் கொண்டிருந்தான். எனக்கும் என் வாழ்வில் இருந்த ஒரே ஒளி என்னை விட்டு மறைவது போல் உணர்ந்தேன். மீண்டும் எனக்குள் சொல்லிப் பார்க்கிறேன். உணர்தல் தானே வாழ்க்கையின் இரகசியம்.



எம்.திரு

# விராட் கோலி விசேடங்கள்



இந்தியாவின் வெற்றிகரமான டெஸ்ட் கப்டன் கோலிதான். அவர் தலைமையில் விளையாடிய 65 போட்டிகளில், இந்தியா 38 வெற்றிகளைப் பதிவு செய்துள்ளது. 11 போட்டிகள் டிரா ஆகியுள்ளன. 16 தோல்விகள்.

MRF என்றாலே நமக்கு சச்சின் தான் ஞாபகம் வருவார். அவருக்குப் பிறகு MRF Wizard பட்டை கோலியும் பிரபலப்படுத்தி விட்டார். அந்த நிறுவனத்தோடு ஒப்பந்தம் செய்ய கோலி வாங்கிய தொகை எவ்வளவு தெரியுமா? 8 ஆண்டுகளுக்கு 100 கோடி ரூபாய்.

2017 இல் பூமா நிறுவனத்துடன் 110 கோடி ரூபாய்க்கு ஒப்பந்தம் ஒன்றைக் கையெழுத்திட்டார் விராட். ஒரு இந்திய விளையாட்டு வீரர் இவ்வளவு ரூபாய்க்கு ஒப்பந்தம் கையெழுத்திட்டது இதுதான் முதல் முறை.

ஒருநாள் போட்டிகளில் அதிவேகமாக 8000, 9000, 10000, 11000, 12000 ரன்களைக் கடந்தது கோலி தான். சர்வதேச கிரிக்கெட்டில் அதிவேகமாக 23000 ரன்களைக் கடந்ததும் இவர்தான்.

# பைசா நகர் சாய்ந்த கோபுரம் (இத்தாலி)



மிகச்சரியாக கணிக்காமல் செய்யப்பட்ட பிழை ஒன்று இன்று உலக அதிசயமாக உருவெடுத்துள்ளது. இத்தாலியிலுள்ள ஃபசா நகர் மக்கள் தங்களது யுத்த வெற்றி ஒன்றைக் கொண்டாட நிர்மாணித்த கோபுரம் நேராக நிற்காமல் ஒரு பக்கமாக சாயத்தொடங்கியதால் இன்று எல்லோரது கவனத்தையும் ஈர்த்துக்கொண்டிருக்கிறது.

பிசா நகர் அல்லது பைசா நகர் என்று பலவாறு உச்சரிக்கப்படும் ஊர் 1000 வருடங்களுக்கு முன் மிகச்சிறிய கிராமமே.

இத்தாலியிலுள்ள மத்தியத் தரைக்கடல் பகுதியில் டஸ்கன் பிரதேசத்தில் ஃபுளோரிடா என்கிற பிரபலமான வணிக நகரிலிருந்து சுமார் 25 கி.மீ. தொலைவில் பைசா நகரம் அமைந்துள்ளது.

கி.பி. 1068 ஆம் ஆண்டு பிசியன்கள் எனப்படும் இத்தாலிய இனக்குழு ஒன்று சிசிலித்தீவின் பாலெர்மோ நகரைத்தாக்கி அங்கிருந்த விலை உயர்ந்த செல்வங்களையும், ஆபரணங்கள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் கவர்ந்து வந்தனர். இந்த மாபெரும் வெற்றியைக் கொண்டாடவும், தங்களைப்பற்றி சரித்திரத்தில் ஒரு நிலையான இடத்தை குறிப்பிடும் விதமாகவும் ஒரு கோபுரத்தை கட்ட முடிவெடுத்தனர்.

அந்த கோபுரம் அவர்கள் வணங்கும் தேவாலயமாகவும் இருக்க வேண்டும் என்று நினைத்தனர். கி.பி.1073 ஆம் ஆண்டு தொடக்கப்பட்ட பைசா நகர் கோபுரப்பணிகள் இடையிடையே நடைபெற்ற உலகப்போர், அந்நிய நாடுகளின் ஆக்கிரமிப்புகள் போன்ற பல்வேறு தடைகளைத்தாண்டி கிட்டத்தட்ட 344 ஆண்டுகள் கழித்து கி.பி. 1417 இல் இன்றைய முழுமையான நிலைக்கு வந்திருக்கிறது.

இத்தாலியின் தலைசிறந்த கட்டடக்கலை நிபுணர்கள்

## இந்தியாவிலுள்ள சாய்ந்த கோபுரம்

போனானோ பிசானோ மற்றும் கெரார்டோ ஆகியோர் தலைமையில் 1073 ஆம் ஆண்டு ஓகஸ்ட் ஒன்பதாம் திகதி கோபுரப்பணிகள் தொடங்கின.

பைசா நகரத்தின் மீது இருந்த அதீதப் பற்று காரணமாகவும் அமையப்போகும் கோபுரத்தின் மீது இருந்த பெருத்த நம்பிக்கை காரணமாகவும் போனானோ, அஸ்திபாரத்துக்கான செலவைத் தானே ஏற்றுக் கொண்டார் என்ற ஒரு தகவலும் உண்டு.

கட்டடத்தின் உட்பகுதி வெற்றிடமான உருளை வடிவத்தில் இருக்க வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டு அதன்படியே உருவான கோபுரத்தின் சுவர் பகுதி சுண்ணாம்புக்கற்களால் ஆனவை. அதன் மீது வனப்புமிக்க சலவைக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளன.

(தொடரும்)




சுதாகர்




வினித்




தாரணி




கஜானா




பிரசாந்த்




றுசாந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

264

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## ஒருவர் நோய் வாய்ப்பட்டால்...

வைத்தியசாலைகளில் தாம் அவமதிப்புகளுக்கும் கஷ்டங்களுக்கும் உள்ளாவதாகக் கருதி வைத்தியசாலைகளுக்குச் செல்லாது ஆபத்துக்களை தேடிக்கொள்பவர்கள் எத்தனை பேர்? வைத்தியருக்கு சொல்லும் தனது நோய் நிலை சம்பந்தமான இரகசியத் தன்மை பேணப்படுமா? என்ற சந்தேகத்தில் இக்கட்டான சில உண்மைகளை மறைப்பதனால் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் பெரும் தாக்கங்கள் எத்தனை? இரகசியம் பேணப்பட வேண்டிய மருத்துவத் தகவல்களைப் பத்திரிகையில் பிரசுரித்து அம்பலப்படுத்தப் படுவதால் ஏற்படும் அவமானத்தால் நிகழ்ந்து வரும் சுகாதாரத் தாக்கங்கள் எத்தனை? தராதரம் குறைந்த மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்படுவதால் ஏற்பட்டுவரும் பாதிப்புக்கள் எத்தனை?

நோயுற்ற ஒருவரின் நோய் சம்பந்தமான தகவல்கள் அனைத்தும் உணர்வ பூர்வமானவை. அது சாதாரண நோயாக இருந்தாலும், கடுமையான நோயாக இருந்தாலும் அல்லது அது அவரின் அந்தரங்கங்கள் சம்பந்தப்பட்ட நோயாக இருந்தாலும் அந்த நோய் சம்பந்தமான தவல்களின் இரகசியத் தன்மையை பாதுகாக்க வேண்டியது மருத்துவக் குழுவின் கடமையாகும். 18 வயதிற்கு மேற்பட்ட ஒவ்வொருவருக்கும் தமது சுகாதார நிலை சம்பந்தமான தகவல்களை வேறு எவருக்கும் தெரியப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளும் உரிமை இருக்கின்றது. சம்பந்தப்பட்டவரின் அனுமதி இன்றி அவரின் நெருங்கிய உறவுகளான பெற்றோருக்கோ, கணவன், மனைவிக்கோ அல்லது பிள்ளைகளுக்கோ கூட அவரின் மருத்துவ தகவல்களை தெரிவிக்கும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை. ஒருவர் நோய் வாய்ப்பட்டால் அவரின் உற்றார், உறவினர், நண்பர்கள், எதிரிகள், விடுப்பு விசாரிப்போர் போன்ற பல தரப்பட்டவர்களும் கூட்டமாகவும் தனித்தனியாகவும் நேரடியாகவும் தொலைபேசி மூலமாகவும் மருத்துவக் குழுவிடம் நோயுற்றவரின் நோய் நிலை சம்பந்தமாக வினவுவது ஒரு சாதாரண நிகழ்வாக இருந்து வருகின்றது.

அத்துடன் நிவாரணம் பெறுவதற்கும் குடும்ப உறுப்பினர்கள் விசா பெறுவதற்கும், குடும்பத்தவரின் தொழில் இடமாற்றம் தொடர்பான விடயங்களை கையாள்வதற்கும் நோயுற்றவரின் இரகசியமான மருத்துவத் தகவல்களை கடிதம் மூலம் எழுதித்தருமாறு கேட்டு வைத்தியரிடம் படையெடுக்கும் மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. சில சமயம் பத்திரிகைகள் கூட நோயுற்றவர்களின் அந்தரங்கங்கள் அம்பலப்படுத்துவதற்கு காரணமாக அமைகின்றன. உதாரணமாக “AIDS நோயாளி வைத்தியசாலையில் அனுமதி”, “பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்ட சிறுமிக்கு சிகிச்சை”, “சட்டவிரோத கருக்கலைப்பு பெண் ஆபத்தான நிலையில் அனுமதி” போன்ற செய்திகள் சர்வசாதாரணமாகி வருகின்றது. தமது நோய் நிலை அம்பலப்படுத்தப்பட்டு விடும் என்று அஞ்சி பலர் தமது நோய் நிலையின் உண்மையான வடிவத்தை மருத்துவரிடம் வெளிப்படுத்த தயங்குகின்றனர். இதனால் பல பாரதூரமான விளைவுகளும் ஏன் இறப்புகளும் கூட ஏற்பட்டு வருகின்றன.

மருத்துவக் குழு நோயுற்றவர்களுக்கு சொல்வது ஆலோசனைகளே தவிர கட்டளைகள் அல்ல. அது அவரது மருந்துகள் சம்பந்தமாக இருந்தாலும் சத்திர சிகிச்சைகள் சம்பந்தமாக இருந்தாலும் மருத்துவக் குழுவின் ஆலோசனைகளைக் கேட்டு இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை நோயுற்றவர்களுக்கே இருக்கின்றது. அந்த ஆலோசனைகள் கடைப் பிடிக்கப்படாவிட்டால் கூட கோபித்துக் கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவுக்கு இல்லை.

உதாரணமாக ஒருவர் கொடுக்கப்பட்ட மருந்துகளை ஒழுங்காக பாவிக்காது உடற்பயிற்சியோ உணவுக்கட்டுப்பாடோ எதுவும் செய்யாது உடல் பருத்து புகைக்கும் தன் பழக்கத்தையும் தொடர்ந்து கொண்டு குடிபோதையில் மருத்துவரைச் சந்திக்கப் போனால் கூட அவரைக் கோபித்துக் கொள்ளும் உரிமை மருத்துவக் குழுவிற்கு இல்லை.

நோயுற்றவருடன் கலந்துரையாடாமல் அவரின் உண்மையான விருப்பு, வெறுப்புக்கள் கேட்கப்படாமல் குடும்ப உறுப்பினர்களின் தீர்மானத்தின்பேரில் அவர் மீது பல சிகிச்சை முறைகளும் மற்றைய கவனிப்பு முறைகளும் திணிக்கப்படும் நிலை பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டு விடுகிறது. ஒருவன் நோய்வாய்ப்பட்டு விட்டான் என்பதற்காக அவனிற்கு இருக்கும் அடிப்படை மனித உரிமைகளை மீறிச் செயற்படுவது மனிதத்துவம் ஆகாது.

அந்த வகையிலே நோயுற்றவர் தனது சொந்த விருப்பப்படி நடந்து கொள்ளும் உரிமையும் மதிக்கப்பட வேண்டும். தனது நோய் நிலை சம்பந்தமான முழு விபரங்களையும் கேட்டுத் தெரிந்து கொள்ளும் உரிமை, அதற்கு செய்யக் கூடிய வைத்திய முறைகளால் ஏற்படக் கூடிய நன்மை, தீமைகள் பற்றி அறிந்து கொள்ளும உரிமை, ஒவ்வொரு சோதனைகளும் எதற்காகச் செய்யப்படுகின்றன என்று கேட்டு தெரிந்து கொள்ளும் உரிமை, உடற்பயிற்சி மற்றும் உணவுக் கட்டுப்பாடு, நடத்தை மாற்றங்கள் போன்றவற்றால் ஏற்படக் கூடிய அனுகூலங்கள், பிரதி கூலங்கள் எவை என்பதை அறிந்து கொள்ளும் உரிமை போன்ற உரிமைகளை நோயுற்ற ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்டால் மட்டுமே அவரினால் தனது சிகிச்சை முறைகள் சம்பந்தமான தீர்மானத்தை சரியான முறையில் எடுக்க முடியும்.

நோயுற்ற ஒருவர் மருந்தை பாவிக்காமல் இருப்பதற்கு விருப்பப்படலாம், சத்திர சிகிச்சை செய்யாமல் இருக்க விரும்பலாம், தொடர்ந்து புகைப்பிடிப்பதற்கு விருப்பப்படலாம், உடலில் வலியை ஏற்படுத்தக் கூடிய சோதனைகளை செய்யாமல் விடுவோம் என்று நினைக்கலாம், தொடர்ந்து குடிவகைகள் பாவிக்க ஆசைப்படலாம், வேறொரு மருத்துவரின் இரண்டாவது அபிப்பிராயத்தை கேட்க விரும்பலாம், கோயிலுக்குச் சென்று சில சமயப் பெரியவர்களின் ஆசியும் அறிவுரையும் பெற்று வரவிருப்பப்படலாம், வேறு ஒரு மருத்துவ முறைக்கு மாறுவதற்கு விருப்பப்படலாம், சொந்த விருப்பத்தின் பெயரில் வைத்தியசாலையிலிருந்து வீடு செல்ல நினைக்கலாம், உணவுக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ள விருப்பப்படலாம்.

இதுபோன்ற பல விருப்பங்கள் நோய் வாய்ப்பட்ட ஒருவருக்கு இருக்க முடியும். மருத்துவத்துறையிலே ஒருவர் வாழும் காலத்தை நீடிக்க வேண்டும் என்பது எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு முக்கியத்துவம் அவர் வாழும் காலத்திலே மகிழ்ச்சியாகவும் மன நிறைவாகவும் வாழ வேண்டும், வாழ வைக்க வேண்டும் என்பதிலும் இருக்கின்றது.

எனவே நோய் வாய்ப்பட்டவர்கள் தமது மன நிறைவுக்காக சுகாதாரம் சம்பந்தமான தமது சொந்த விருப்பங்களை மருத்துவக் குழுவிற்கு தயங்காமல் தெரியப்படுத்த முடியும்.

தமது உண்மையான நிலைப்பாட்டை அல்லது விருப்பங்களை மருத்துவக் குழுவிற்கு சொல்வதனால் அவர்களின் மருத்துவக் கவனிப்பில் பாதிப்பு ஏற்படும் என்று கருதிவிட முடியாது.

மருத்துவக் குழு நோய் வாய்ப்பட்டவருக்கு சில விடயங்களை தெளிவுபடுத்த இது உதவியாக இருக்கும். சரியான ஆலோசனைகளை நோயுற்றவர் கடைப் பிடிக்காது விட்டால் அவருக்கு ஏதாவது ஆபத்து நிகழ்ந்து விடுமோ என்ற மனிதாபிமான அடிப்படையிலே நோயுற்றவர்களை கண்டிக்கும் நிகழ்வு பல நடைபெற்ற வண்ணம் தான் இருக்கின்றன.

கண்ணுக்கு முன்னால் ஒருவர் ஆபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் பொழுது அவரை தடுத்தும் கேட்காமல் அதே திசையில் அவர் சென்று கொண்டிருக்கும் பொழுது அதனை அமைதியாக பார்த்துக் கொண்டிருப்பது யாருக்கும் மிகவும் கடினமானதாக இருக்கும். இந்த நிலையே பல சமயங்களில் மருத்துவனுக்கும் ஏற்படுகிறது.

எது எவ்வாறாக இருப்பினும் நோயுற்றவருடன் கோபப்படுவது சரியான செயலாகாது. மருத்துவ ஆலோசனைக்கு எதிராக ஒருவர் வீடு செல்லும் சந்தர்ப்பங்களில் கூட நோய் நிரூபண அட்டையையும் வீட்டிலே பாவிப்பதற்கான மருந்துகளையும் தொடர்ந்து வைத்தியசாலைக்கு வர வேண்டிய திகதிகளையும் கேட்டு பெற்றுக் கொள்ளும் உரிமை நோயுற்றவருக்கு இருக்கின்றது.

மனம் மாறி அல்லது நோய் கடுமையாகி மீண்டும் அவர் வைத்தியசாலைக்கு வந்து அனுமதி பெற விருப்பப்படின் எந்தவித மனச்சஞ்சலமும் இன்றி வைத்தியசாலைக்கு வந்து அனுமதி பெறும் உரிமை அவருக்கு இருக்கின்றது. தொடர்ந்து மருந்தெடுக்க வேண்டிய தேவை உடையவர்கள் வைத்தியசாலை கிளினிக்கில் OPD ஊடாக தாமாகவே சென்று சேர்ந்து கொள்ளும் உரிமை இருக்கிறது.

இதற்கு வேறு வைத்தியர்களின் சிபார்சுக் கடிதங்களோ அனுமதிக் கடிதங்களோ அவசியமில்லை. நோயுற்றவர்களின் கவனிப்பு முறை உணர்வு சம்பந்தப்பட்டது. மனிதாபிமானம் சம்பந்தப்பட்டது. பல மனங்களின் உணர்ச்சி சம்பந்தப்பட்டது. மனச்சாட்சி சம்பந்தப்பட்டது.

உயிருக்கும் உடலுக்கும் உணர்வுகளுக்கும் உறவுகளுக்கும் இடையேயான போராட்டமாகவே மருத்துச் சிகிச்சை முறை அமைந்திருக்கிறது. ஒவ்வொரு நோயுற்றவரும் குணப்பட்டுச் செல்லும் பொழுது அவரும் அவரது சுற்றமும் மட்டுமல்ல மருத்துவக் குழுவும் அவர்களுடன் சேர்ந்து மட்டற்ற மகிழ்ச்சி அடையும்.

ஒரு நோயாளிக்கு பாரதூரமான பாதிப்புகள் ஏற்பட்டு விட்டால் அல்லது நோயுற்றவர் இறந்து விட்டால் அவரது சுற்றத்துடன் சேர்ந்து மருத்துவக் குழுவின் உள் மனமும் துயரம் கொள்ளும். மருத்துவத்துறையில் மடுமல்ல எந்தத் துறையிலும் இருக்கும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு சட்டக் கட்டுப்பாடுகளுக்கு மேலதிகமாக புரிந்துணர்வும் மனிதாபிமான உணர்வுகளும் கூட்டு முயற்சியுமே முக்கியமாக அமைகிறது.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூகமேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (themilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்